OFFICE OF THE ... REGISTERED 30 JUL 1913 MADRAS.

சென்னை வியாபாரி

என்கிற

தென்னிந்தியா வர்த்தக ஜர்னல்

புஸ்தகம் 1. Vol. 1. | பிரமாதீச ௵ ஆனி௴ 27௳ 1913 ௵ ஜூலை௴ 10௳ | ஸஞ்சிகை 3. No. 3.

"சென்னை வியாபாரி."

—:‡:—

மானேஜர் ஆபீசின் விளம்பரம்.

நிகழும் ஜூலைமாத மாரம்பமாக வியாபாரத்துடன், கைத்தொழில், ஐக்கிய முயற்சி, விவசாய முதலான விஷயங்களையும் அடக்கிக் கொண்டு சென்னை வியாபாரி மாதம் ஒருமுறை பிரசுரஞ் செய்யப்பட்டுவரும்.

இங்ஙனம் :

மானேஜர்.

A Sugar Association for Madras.

சென்னபட்டணத்திற்கு ஒரு சர்க்கரைச் சங்கம்.

—:(✱):—

சென்னப்பட்டணம் ஸீக் கஸ்டம் கலெட்டர் பிரஸ்தாப வருடத்தில் அதாவது 1913-14ல் சர்க்கரை இறக்குமதி குறைந்து போகுமென்று அபிப்பிராயப்பட்டு எழுதி யிருக்கின்றனர். அவர் அப்படி அபிப்பிராயப் படுவதற்குக் காரணம் என்னவென்றால், சென்ற வருடத்தில் சர்க்கரை இறக்குமதி அதிகமாய்ச் செய்யப்பட்டிருக்கிறபடியால் சரக்கு வர்த்தகர்களிடம் கையிருப்பிருக்கக் கூடுமென்று நினைப்பதே. ஆனால் சர்க்கரை இறக்குமதியின் கடந்த வருடங்களின் ரிப்போர்ட்டைப் பார்த்தால் சர்க்கரை இறக்குமதி வருஷா வருஷம் வளர்ந்து கொண்டு போகிறதேயொழிய குறுகும் என்று நினைப்பதற்கு ஏதுவைக்காணோம். 1906-07 உடன் முடியும் 5 வருடங்களில் இம் மாகாணத்தில் வருடத்திற்குச் சராசரி 550 டன் இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது :—

1907—08, ல்—1000 டன்
1908—09, ல்—2000 டன்
1909—10, ல்—3500 டன்
1910—11, ல்—3500 டன்
1911—12, ல்—28000 டன்

இவ்வளவும் வெள்ளைச் சர்க்கரையின் இறக்குமதி; வருஷா வருஷம் இறக்குமதி உயர்ந்து கொண்டு போகிறதே யொழிய 1902 முதல் 1913 வரையில் எந்த வருடத்திலாவது அதன் முந்திய வருடத்தைவிட இறக்குமதி குறைந்து போயிருக்கிற தென்பதற்கு பெரும்பாலும்விடமில்லை. வெள்ளைச் சர்க்கரை இவ்வளவு அபரிமிதமாய்ச் செலவாவதுடன் மட்டச் சர்க்கரையும், பன வெல்லமும் நாட்டுச் சர்க்கரையும் செலவழிகிறதையும் கவனிக்கவேண்டும். சர்க்கரை இவ்வளவு அதிகப்படியாகச் செலவாகி வருவதின் காரணத்தை விசாரிப்பதற்கு வெகுதூரம் போகவேண்டியதில்லை! கற்கண்டு தயார் செய்வதில் ஏதேஷ்டமான சர்க்கரை செலவாய் வருகிறதென்ப துண்மையேயாயினும் நாடு நகரம் கிராமம் குக்கிராமங்களில்கூட காபி ஹோட்டல்களும் மிட்டாய்க் கடைகளும் ஏற்பட்டிருப்பதும், நம் தேச ஜனங்களிடம் காலை மாலையில் முறையே காபி டீ சாப்பிடும் வழக்கம் வேரூன்றி வருவதும் சர்க்கரையின் விசேஷமான செலவிற்கு முக்கிய காரணங்களாகும் என்று சொல்லப்படுகிறது

வெள்ளைச் சர்க்கரையின் இறக்குமதி உயர உயர மட்டச் சர்க்கரையினுடையது மட்டுப் பட்டுக்கொண்டே வருகிறது. 1906—07 உடன்முடியும் 5 வருடங்களில் 5 ஆயிரம் டன் இறக்குமதி செய்யப்பட் டிருக்கும்போது கடந்த 12 மாத காலத்தில் 50 டன் கூட இறக்குமதி செய்யப்படவில்லை. வெள்ளைச் சர்க்கரையின் விலை அந்தர் ஒன்றுக்கு ரூ. 9-8 முதல் ரூ. 13-8 வரையில் சில சமயம் ஏறியும் சில சமயம் இறங்கியும் வந்துகொண்டிருக்கிறது. வெள்ளைச் சர்க்கரை விசேஷமாக இறக்கப்படுவதும் கிரையம் மிகவும் நயமாயிருப்பதும் பன வெல்ல ஏற்றுமதிக்கு அனுகூலமாயிருக்கின்றன. சென்ற ஒருவருடத்தில் மட்டிலும் ரூ. 20 லக்ஷம் பெறுமான முள்ள பன வெல்லம் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. நம் மாகாணத்திலேயே சக்கரை இறக்குமதி இவ்வளவு மும்மரமாயும் வியப்பைக் கொடுக்கக் கூடியதாயும் இருக்கும்போது சிற்றுண்டிகளில் சர்க்கரை கலப்பதுடன் அயன் ஆகாரத்திலேயே சர்க்கரை கலக்கும் குணாதிசயமுடைய ஜனங்களடங்கிய வங்காளத்தில் சக்கரை இறக்குமதி இன்னும் அபரிதமாயிருக்குமென்பதை நாம் எடுத்துச் சொல்லவேண்டிய தனவசியம். ஆதலால் சர்க்கரை நம் நாட்டில் செலவாகிறதையும் அதற்குத் தகுந்தபடி இறக்குமதி விசேஷித்து வருவதும், விலை மாறுதல்களும் கையிருப்பும் கிராக்கியும் மிகவும் நுட்பமாக கவனிக்கப்படவேண்டிய தவசியமாயிருக்கிறபடியால் கல்கத்தாவிலிருக்கும் சர்க்கரை வர்த்தகர்கள் ஒன்று கூடி ஒரு சங்கம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு "சர்க்கரை" சங்கம் என்று பெயர். இதற்கு பாபு கிரிக்ஷ சந்திரபட்டாச் சார்ஜி பிரசிடெண்டாகவும் மெசர்ஸ் M. அப்தல் கானியும் பாபு ஜானகி நாத் பனர்ஜியும் கௌரவ காரியதரிசிகளாகவும் நியமிக்கப்பட் டிருக்கிறார்கள். அது போலவே சர்க்கரை வியாபாரம் எதிர்பார்க்காத அசந்தர்ப்பங்களை முன்னிட்டு யாதொரு இடைஞ்சலுக்கும் உட்படாமலிருக்கும் பொருட்டு முன் ஜாக்கிரதையாக சென்னை சர்க்கரை வர்த்தகர்களும் ஒரு சங்கம் ஸ்தாபித்துக் கொள்ளுவார்கள் என்று நம்புகின்றோம்.

Vizagapatam Industrial Conference.

விசாகப்பட்டணம் கைத்தொழில் கூட்டம்.

சென்ற ஜூன்மீ 12உ சோடாவரத்தில் நடந்த விசாகப்பட்டணம் கைத்தொழில் கூட்டத்திற்கு பிரசிடெண்டாயிருந்த ஆனரபில் மிஸ்டர் C. V. S. நரசிம்மராஜு அவர்கள், ஐக்கிய நாணயச் சங்கங்களின் ஆக்ட் அமுலுக்கு கொண்டு வரப்பட்டு அனேக வருஷங்களாயினும் இன்னும் அச்சங்கங்களின் கொள்கை, கைத்தொழில் விஷயமாகப் பிரயோகிக்கப்படவில்லையென்றும், விவசாய முள்பட நம் நாட்டுக் கைத்தொழில்களில் அவைகள் உபயோகப் படுத்தப்பட்டு அவைகள் விருத்தி செய்யப்பட்டால் நமக்குப் பயனைக் கொடுக்குமென்றும் சொன்னார். அவர் அதன்பிறகு தோலைப் பதப்படுத்தும் தொழில் நம்முடைய ஜில்லாவில் அனேக வருடகாலங்களாக யாதொரு மாறுதலுமடையாமல் ஆதியில் எப்படி பதப்படுத்தப்பட்டு வந்தனவோ அப்படியே இப்போதும் செய்யப்பட்டு வருகின்றதென்றும் மேல் நாடுகளில் தினே தினே நூதன முறைகள் கண்டுபிடிக்கப்பட்டும் அனுஷ்டிக்கப்பட்டும் தோல்கள் பதனிடப்பட்டும் மிகவும் நேர்த்தியான பலவகைத் தோல் விற்பனைக்காக மார்க்கட்டிற்கு அனுப்பப்பட்டு வருகின்றன வென்றும் ஆதலால் தம்முடைய ஜில்லாவிலிருக்கும் தோல் ஷாப்புகளில் வேலை செய்யும் வேலைக்காரர்கள் வேலை செய்யும் காலம்போக சாயங்காலத்தில் ஒழிந்த வேளையிலே தோலைப் பதப்படுத்தும் தொழிலை கற்பித்துக்கொடுக்கும் பள்ளிக் கூடத்திற்கு அனுப்பப்பட்டு வந்தால் வெகு சீக்கிரம் இத்தொழில் விருத்தி அடைந்து வருமென்றும் வேலைக்காரர்களும் தோலை நாசூக்காக விருக்கும்படி பதம்செய்ய யோக்கிதை உடைத்தானவர்களாவார்கள என்றும், ஆதலால் இந்த ஜில்லாவிலுள்ள தேசாபிமானிகளாக விருக்கும் தனவந்தர்கள் ஒன்று கூடி இம்மாதிரியான பள்ளிக் கூடங்கள் இரண்டொன்று ஸ்தாபிக்க முயற்சி செய்யவேண்டுமென்றும் சொன்னார்.

ராஜம் அல்லது பாண்டூரில் ஒரு நெசவுப் பள்ளிக்கூடமும், இந்த ஜில்லாவில் தோல் பதனிடும் பள்ளிக்கூடம் ஒன்றும் கவர்ன்மெண்டாரால் ஸ்தாபிக்கப்பட வெண்டுமென்பது இந்தக் கான்பரென்ஸ் செய்த தீர்மானங்களில் ஒன்று.

Aluminium Industry.
அலுமினியம் கைத்தொழில்.

(:o:)

1898-ம் வருடத்தில் தான் அலுமினியம் இறக்குமதி செய்யப்பட்டு சமையல் சாமான்கள் முதலியவை செய்து காண்பிக்கப்பட ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்ப முயற்சி வெற்றியடையவே, இத் தொழிலே சென்னப்பட்டணத்தில் இந்தியன் அலூமினியம் கம்பெனியாரிடம் ஒப்புவிக்கப்பட்டது. அவர்கள் இன்னும் அத் தொழிலையும் வியாபாரத்தையும் நடத்தி வருகின்றார்கள். ஆனால் அலூமினிய சாமான்கள் இந்த ஒரு கம்பெனியார்களால் மட்டிலும் தயார் செய்யப்பட வில்லை. அச் சாமன்களை இன்னும் பல ஊர்களிலும் தயார் செய்துவருகின்றார்கள். வீ கஸ்டம் கலெகட்டர்கள் பயிரங்கப்படுத்தி யிருக்கும் 9-வருடத்திய ரிட்டர்ன்களால் அலூமினியம் கைத்தொழில் விசேஷ விருத்தி அடைந்து வருகிறதென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகின்றது.

வருடம்	அலுமினியம் இறக்குமதி அந்தர் (கணக்கு.)	லக்ஷக்கணக்காய் விலை மதிப்பு.
1904-05	890	1.05
1905-06	1,803	2·06
1906-07	1,964	2·89
1907-08	2,696	3·62
1908-09	3,734	3·21
1909-10	11,740	9·02
1910-11	11,784	9·24
1911-12	21,512	15·21
1912-13	35,809	25·51

ஆகவே சென்ற வருடத்தில் மட்டிலும் 25 லக்ஷரூபாய் பெறுமான அலூமினியம் இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. அலூமினியப் பாத்திரங்களில் மோர் அல்லது பால் வைத்தால் கைப்பு கொடுக்கிற குணதிசயம் அதனிடம் இல்லாமல் விருப்பதை முன்னிட்டு ஜனங்கள் அப்பாத்திரங்களை வெகு விருப்பத்துடன் வாங்கி வருங்குகின்றார்கள். வருஷம் ஒன்றுக்கு 5-ஆயிரம் டன் முதல் 10-ஆயிரம் டன் வரையில் ஆதாவது ரூபாய் 70 லக்ஷம் முதல் 140 லக்ஷம் வரையில் மதிப்புள்ள அலூமினியம் வெகு சீக்கிரத்தில் நம்முடைய இந்தியாவில் செலவழியுமென்றும் சென்னையில் கைத்தொழில் இலாக்காவிற்கு டைரக்டராக விருந்த மிஸ்டர் சாட்டர்டன் கூறுகின்றனர். அலூமினியம் இவ்வளவு விசேஷமாக இறக்குமதி செய்யப்பட்டு வருவதில் நம் தேசத்தின் பொருளாதார நிலைமை விருத்தியாகமாட்டாது. ஏன் என்றால், நம் வீடுகளில் வழங்கப்பட்டும் பித்தளை, செப்புப் பாத்திரங்களுக்காக முறையே பித்தளையும், செம்பும் இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றனவே யொழிய மற்றப்படி வேறில்லை. அதுபோல அலூமினியமும் இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றது. ஆயினும் அலூமினியத்திற்கு வேண்டிய சாமான்கள் மேற்குத் தொடர்ச்சிமலைக்கு அருகில் இருக்கின்றனவென்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறபடியாலும் இனி அலூமினியம் இவ்விடத்திலேயே தயார் செய்யப்படப் போகிறபடியாலும் நம் நாட்டு பொருளாதார நிலைமையும் அலூமினியத்தால் பலப்படுமென்று நினைக்கின்றோம்.

A New Railway Project.
ஒரு புதிய ரயில்வே ஏற்பாடு.

:(*):

சேலத்திற்கும் தென் ஆர்க்காடு ஜில்லாவிலுள்ள உளுந்தூர்ப் பேட்டைக்கும் ஒரு இருப்புப்பாதை மார்க்கம் போடுவதாகவும் இது 90 மயில் நீளமுள்ளதென்றும் பங்கு ஒன்றுக்கு 100 ரூபாய் வீதம் 70 ஆயிரம் பங்கு சேர்ந்து ஒரு கம்பெனி ஸ்தாபிக்கலாமென்றும் 53 லக்ஷ ரூபாய் சேர்ந்தவுடன் வேலை ஆரம்பித்துவிடலாமென்றும் இந்த இருப்புப்பாதை சேலத்தின்

வழியாகவும் செல்லுமாகையால் அந்த ஜில்லா போர்டார்களும் இதில் பங்கு எடுத்துக் கொள்ளலாமென்றும், இந்த இருப்புப்பாதையை போட்டுமுடித்து தென் இந்தியா ரயில்வே கம்பெனியாரிடம் ஒப்புவித்து விடுவதாக சென்னப்பட்டணத்திலிருக்கும் மெசர்ஸ் பாரி கம்பெனியார்கள் பிரரேபணை செய்திருக்கிறார்கள்.

Finance Commission.
நாணய கமிஷன்.

:(*):

சென்னையிலிருக்கும் தென்னிந்தியாச் சேம்பர் ஆப் காமர்ஸ் என்கிற வர்த்தக ஆலோசனை சபையின் தரப்பில் சென்னை இந்தியன் பாங்க் காரியதரிசியாக விருக்கும் மிஸ்டர் வித்தியா ஸாகர் பாண்டியா அவர்கள் நாணய கமிஷன் முன்பாக சாக்ஷியும் சொல்ல கவர்ன்மெண்டாரால் அழைக்கப்பட்டிருக்கிறார்.

Madras Market Reports.
சென்னப்பட்டணம் மார்க்கட் ரிபோர்ட்.

*:)

சீமை ஜவுளி.

1913-ம் ஞூ ஜூன்மீ 16௳

மார்க்கட்டின் பொதுவான நிலைமையில், ரிப்போர்ட் செய்யும்படியான மாறுதல் பெரும்பாலுமில்லை. எல்லாவகைச் சரக்குகளுக்கும் தற்காலம் மார்க்கட்டின் குணாதிசயங்கள் எப்படியிருக்கின்றன வென்றால் "தேவை உபாயம்", விலைகள் ஒரேதொடர்ந் தேர்த்தியாய் உறுதியாய் நிற்கின்றன. "சீமை மார்க்கட்டை"ப்பற்றி ஒரு நிரூபர் அடியிற்கண்டபடி எழுதுகின்றார் :—கடந்த சில மாதங்களாக மார்க்கட்டின் நிலைமையில் ரிப்போர்ட் செய்யும்படியான பெரிய மாறுதல்கள் யாதொன்றும் உண்டாகவில்லை. மார்க்கட் விலைகள் உறுதியாய் நிற்கின்றன. சிறிது நாட்கள் விலை ஏறியிருப்பதும் சிறிது நாள் இறங்கியிருப்பதுமாக விருக்கின்றன. வியாபார ஸ்தலத்திலிருக்கும் (Spot Cotton) பஞ்சு 6-60 முதல் 6-90 வரையில் மாறிக்கொண்டு வருகின்றது. ஜனவரிமீ மத்தியிலிருந்து விலைகள் மேலே சொன்னபடி மாறிக்கொண் டிருக்கின்றன. துணி விலையும் நூல் விலையும்கூட உறுதியாய் நிற்கின்றது. இப்படியிருப்பதற்கு ஒரு காரணம் என்னவென்றால் வேலை செய்கிறவர்கள் கேட்கிறபடி அந்த தினுசுபஞ்சு சப்ளைசெய்வதில் இன்னும் தொந்தரவிருக்கிறது. தற்சமயம் 17 பெரிய ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன. ஏறக்குறைய இரண்டுமாத காலமாக இந்த ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன. அந்த தொந்திரவு தற்காலம் ஒழிந்துபோகும் என்று நினைப்பதற்கு யாதொரு முகாந்திரமுமில்லை. சரக்கு தயாராகுவதைத் தடுக்கும்படியான இன்னும் சில தகரார்களிருக்கின்றன. இந்தக் காரனங்கள் எல்லாம் கூடி விலை உறுதியாய் நிற்கும்படியாய்ச் செய்திருக்கின்றன.

(1) Grey Shirtings—காரிக்கம் காடா.

வியாபாரம் பெரும்பாலும் அமரிக்கையாயிருக்கிறது. தேவை அதிகமாயில்லை. உயர்ந்த ரகங்கள்—தாழ்ந்த ரகங்கள்—ஆகிய இந்த இரண்டு ரகங்களுக்கும் விலை உறுதியாயிருக்கிறது. 50,"ம் 58" × 38ம் $38\frac{1}{2}$-கெஜ ரகத்திற்கும் உபாய விசாரணையிருக்கிறது. இந்த ரகங்கள் உபாயமாய் விலையாகிவருகின்றன.

(2) Grey Jaconets—காரிகம் ஜாக்நட்.

மார்க்கட் சுறுசுறுப்பாயில்லை. இனி சுறுசுறுப்பாயிருக்கும்போல் தோற்றுகிறது.

(3) Grey Mull—காரிக்கம் மல்.

கடந்த மாதத்தின் முந்திய பாகத்தைவிட மார்க்கட் ரொம்பவும் அமரிக்கையாயிருக்கிறது. எங்குபார்த்தாலும் விசாரணைகள் உற்சாகக்குறைவா யிருக்கின்றன. நிலைமை பலஹீனமாயிருக்கிறது.

(4) Grey-Dhooties—காரிக்கம் தோவத்திகள்.

உள்ளபடி தேவையான ரகங்களுக்கு கிராக்கியில்லை.

தோவத்திகளின் அளவு 44/45" × $2/6\frac{3}{4}$ கெஜம் இவைகளுக்கு இரண்டணா முதல் மூன்றணாவரையில் விலையில் வித்தியாசம்.

(5) White Mulls—சலவை மல்லுகள்.

கனத்த ரகங்களில் உபாய வியாபாரம் நடந்து வருகின்றது.

1702, 1703-க்கு சமானமான ரகங்களில் உபாய வியாபாரம் நடந்துவருகின்றது. 1702 ன் விலை ரூபா 6-10; 1703ன் விலை ரூபா 7-4-0; இவைகளுக்குச் சமானமானவும்உயர்ந்தவுமான ரகங்கள் 8 முதல் 10 அணு வரையில் குறைந்து விற்கின்றன. நடுத்தர நசுக்கான ரகங்கள் கையிருப்பதிகமா யிருக்கிறது. சரக்குகள் வந்திருக்கின்றன. கையிருப்பு இன்னும்சேரும். விலைகள் வரவர இறங்கிக்கொண்டு வருகின்றன.

41"/42" × 20 கெஜ கனத்த மல்லுக்கு கிராக்கியில்லை; கையிருப்பும் மிதம்.

வெள்ளைகாடா(White Shirtings):—கொள்முதலைத்தணித்து விற்கும்படியான கையிருப்பிருக்கிறது கையிருப்பில் குறைவில்லை.

வெள்ளை கேம்பிரிக் வெள்ளை நேயின்சூக்—விசாரணை சுறுசுறுப்பாயில்லை.

(6) Prints—சீட்டிகள்.

வாரத்திற்கு வாரம் வியாபாரம் மிதமாய் உயர்ந்துகொண்டு வருகின்றது. ஜனங்களுக்குப் பிரீதியான ரகங்களில் சில வியாபாரம் நடந்துவருகின்றது. விசாரணை அதிகப்பட்டு வருமென்பதற்கு குறிகளிருக்கின்றன. வியாபாரத்தின் ரீதி விருத்தியாய்க் கொண்டுவருகின்றது. உள்ளூர் வியாபாரிகள் இனி லாபகரமான காலம் வரும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

(7) Saries—சேலைகள்.

ரிப்போர்ட் செய்யப்படவேண்டிய யாதொரு சம்பவமும் இந்த வாரத்தில் இல்லை. தற்கால ரிபோர்ட்டுகள் தைரியத்தைக் கொடுக்கக்கூடியனவாயில்லை.

Twist and Yarn.

நூல்.

உள்ளூர் மார்க்கட் ஏறக்குறைய உறுதியாயிருக்கிறது. வெளியூர்களிலிருந்து மிதமான கிராக்கி வந்திருக்கிறது; சரக்குகள் அதிகமாய் வந்திருக்கின்றன. விலைகள் உறுதியாய் நிற்கின்றன.

சீமை மார்க்கட் பலமாயிருக்கிறது; இன்டெண்டுகளில்லை.

Cotton.

பஞ்சு.

1913ளு ஜூன்மீ 13வ

மார்க்கட்மந்தம். விலை மிகவும் இறங்கியிருக்கின்றது. ரூபா 2 முதல் ரூபா 3-வரையில் இறங்கி யிருக்கின்றது. எல்லா தினுசு பஞ்சின் விலையும் இறங்கியிருக்கிறது. ஆனால் திருப்பூர் பக்கத்தில் மட்டிலும் ஆலைக்காரர்கள் வாங்கிக்கொண்டு வருகிறபடியால் விலை இறங்காமல் உறுதியாயிருக்கிறது; அமெரிக்காவின்மார்க்கட் பல ஈனமாயிருப்பதால் உள்ளூர் வர்த்தகர்கள் வாங்குகிறதில்லை. சுபிக்ஷமான பயிர் ஈஜிப்டிலும் அமெரிக்காவிலும் எதிர்பார்க்கப்படுகிறது. வாங்குகிறவர்கள் விலை இறங்குமென்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். பம்பாயில் கையிருப்பு ஏதேஷ்டம். ஆலைச் சொந்தக்காரர்களும் ஏற்றுமதிக்காரர்களும், உடன் டெலிவரிக்காக நயமான விலைக்கு பஞ்சை வாங்கிவருகிறார்கள்.

1913ளு ஜூன்மீ 16வ

மார்க்கட் மந்தம். எல்லா தினுசிலும் சென்ற வாரத்திற்கு இந்தவாரம் விலை ரூபாய் 2 இறங்கியிருக்கின்றது. விலை இறங்கும் நோக்கமாயிருக்கும் இந்த சமயத்தில் உள்ளூர் வியாபாரிகள் வாங்குகிறதில்லை. இனிமேல் சப்ளைசெய்யப்படவேண்டிய ஒப்பந்தங்களுக்காக வெளியூர்களில் வாங்கப்பட்டுவருகிறது. சீமை நூல் வியாபாரிகள் மார்க்கட் மந்தமாயிருப்பதை முன்னிட்டு கொள்முதலுக்கு கம்மியாய் விற்கிறார்கள். பிந்திய ஒப்பந்தங்களுக்காக முன்னிட்டு இப்போது வாங்கப்பட்டு வருகிறபடியால் சீமை விலைகள் தணியவில்லை. உள்ளூர் ஆலைகள் தங்களுடையவிகிதங்களைக் குறைத்திருக்கிறார்கள். ஒரு அணு குறைவாக ஒப்பந்தங்களை நிறைவேற்றுகிறார்கள். புரோச்சு பஞ்சு பம்பாயில் சொற்பவிலை ஏறியிருக்கிறது. ஆயினும் மிதமாயிருக்கிறது. கனத்த கையிருப்பை முன்னிட்டு மார்க்கட் மெத்தவும் மந்தமாயிருக்கிறது நல்ல "வெஸ்டர்னு"க்கு நாளது தேதி விலை ரூபா 159 முதல் ரூபா 160 ஆக விருக்கிறது "நார்த்தர்

ன்ஸ்'' ரூபா 158—159. குண்டூர் கொட்டை அடித்த, சிகப்பு கோக்கோ ரூபா 149-150; தேவனகிரி ரூபா 161—162; திருப்பூர் ரூபா 174—175; புரோச் ரூபா 290 (782 ராத்தல்).

சர்க்கரை.

1913ஞூ ஜூன்மீ 9உ

மார்க்கட் உறுதியாயிருக்கிறது. ஒரு மூட்டைக்கு 4 அணாவிலை உயர்ந்திருக்கிறது. ரெயில் வேலைக்காரர்கள் கட்டுப்பாட்டை முன்னிட்டு உபாய வியாபாரந்தான் நடந்து வருகின்றது. இல்லையேல் விலை இன்னும் ஏறியிருக்கும். மேல்கரையில் ரயில் மூலியமாக சரக்கு அனுப்ப வசதிகள் சூனியமாகவிருப்பதாலும் கள்ளிக்கோட்டைக்கு நேரே சரக்கு அனுப்ப சாத்தியமில்லாமலிருப்பதாலும் மூட்டையின் விலை 21 ரூபாயாக விருக்கிறது. அடுத்தவாரம் இன்னும் விலை ஏறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஜூலைமீ முதல் டிசம்பர் வரையில் டெலிவரி செய்யப்பட ஒரு அந்தர் ஒன்றுக்கு ரூபா 8-15 வீதம் ஜாவாச் சக்கரைக்காக உள்ளூர் அவுஸ்காரர்கள் இன்டெண்டுகள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். 100 டன்னுக்கு இன்டெண்டுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

1913ஞூ ஜூன்மீ 16உ

ஒரு அந்தருக்கு ரூபா 8-5 ஆக விருப்பது ரூபா 8-6 ஆனால் ஒழிய சரக்கு கையிருப்புடையவர்கள் ஒப்பந்தங்கள்செய்ய விருப்பமுள்ளவர்களாயில்லை. இரண்டு அந்தர்கொண்ட ஒரு மூட்டை சென்றவாரம் ரூபா 20-8-6 வீதம் பேரம் நடந்திருக்கிறது. ஆயினும் மார்க்கட் நோக்கம் பல ஈனமாயிருக்கிறது. இப்போதிய விலை ரூபா 20-6 தான்.

மஞ்சள்.

1913ஞூ ஜூன்மீ 16உ

மார்க்கட் மந்தமாயிருக்கிறது. ஆனால் விலை இறங்காமல் உறுதியாயிருக்கிறது. உள் நாட்டிலிருந்தும் ஐரோப்பாவிலிருக்கும் விசாரணைகளிருக்கின்றன. கடப்பை காளாஸ்திரி, ஈரோடு சரக்குகள் கல்கத்தாவிற்கும் மார்ஸேயில்சுக்கும் ஏற்றுமதி செய்யப்படுவதற்காக 5 ஆயிரம் மூட்டை 6 ஆயிர மூட்டைகளுக்கு பேரம்நடந்தது. சமீபத்தில் விலையில் மாறுதல் உண்டாகுமென்று வியாபாரிகள் எதிர்பார்க்கிறார்கள். சரக்கை வாங்கி பல விடங்களில் குழியில்போட்டு வைக்கிறார்கள், பம்பாய் வியாபாரிகள் கடப்பையில் வாங்குகின்றபடியால் இரண்டு நாளாக விலை ரூபா 28 ஆக விருந்தது ரூபா 29-8 ஆயிருக்கிறது. சரக்குகள் தாராளமாக விற்பனைக்கு வரவில்லை. சமீபகாலத்தில் சீனாவிலிருந்தும் ஜப்பானிலிருந்தும் நல்ல கிராக்கி வருமென்று வியாபாரிகள் எதிர்பார்க்கிறார்கள். கடப்பை ராசியில் ரூபா 32-4 க்கும் விரல் தினுசில் ரூபா 35 ரூபா 37, ஈரோடு சரக்கில் ரூபா 37-38 க்கும் காளாஸ்திரிச் சரக்கிற்கு ரூபா 34—35 க்கும் பேரம் நடந்திருக்கிறது.

மிளகாய்.

1913ஞூ ஜூன்மீ 9உ

மிகவும் மந்தம். உபாய வியாபாரம் சென்றவாரம் முதல் விலை ஒருவராகன் குறைந்திருக்கிறது. ஏற்றுமதியில்லை 25-ஆயிரம் பெட்டி கையிருப்பிருக்கிறது நாளது தேதி விலை 12½ முதல் 13 வராகனாக விருக்கிறது.

1913ஞூ ஜூன்மீ 16உ

ரிப்போர்ட் செய்யும்படியான யாதொரு மாறுதலுமில்லை.

எள்ளு.

1913ஞூ ஜூன்மீ 16உ

மார்க்கட் சுறுசுறுப்பாயில்லை. ஐரோப்பாவிலிருந்து யாதொருகிராக்கியுமில்லை. சென்றவாரம் போலிருக்கிறது உள்ளூரில் அரைப்பதற்காக மட்டிலும் உபாய வியாபாரம் நடந்திருக்கிறது.

மணிலாக்கோட்டை.

1911ஞூ ஜூன்மீ 16உ

மார்க்கட்டு உறுதியாயிருக்கிறது. 15 ஆயிர மூட்டைகளுக்கும் 7,000, 8,000மணிலாப்பருப்புக்கொட்டைமூட்டைகளுக்கும்நல்லவியாபாரம் நடந்திருக்கிறது சூயேசிற்கும் மார்ஸேயில்சுக்கும் ஏற்றுமதி செய்யப்படுவதற்காக தாராளமான விசாரணையிருக்கிறது;மார்ஸேசுக்கு மணி

லாப்பருப்பு ஏற்றுமதி செய்யப்படுவதற்காக கண்டி ஒன்றுக்கு ரூபா 41-8-0 வீதம் சின்ன லாட்டுகள் உள்ளூர் அவுஸ்காரர்கள் வாங்கிக் கொண்டு வருகிறார்கள். 25-ராத்தல்கொண்ட ஒரு மணங்கிற்கு 2-அணா வீதம் கடப்பையிலே யும், கொண்டாபுரத்திலும் மணிலாக் கொட்டையின் விலை ஏறியிருக்கிறது. கடப்பை கர்நூல், பல்லாரியில் சரக்கு அதிக கையிருப்பில்லை. கடப்பையில் பருவகாலம் முடிந்துபோய் விட்டபடியால் சமீபகாலத்தில் விலை உயரும். ரூபா 65 வரையில்கூட விலைஏறும். மார்ஸேயில் சுக்கு உள்ளூர் அவுஸ்காரர்கள் விசேஷ ஏற்றுமதிசெய்து வருகிறார்கள். விஜயநகர வியாபாரிகள் தங்களுடைய ஆலைகளில் எண்ணை தயார் செய்வதற்காக மணிலாப்பருப்பை விசேஷமாக வாங்கிக்கொண்டு வருகிறார்கள். ஆகையால் 5, 6, அணா விலைகள் ஏறி நிற்கின்றன. மணிலாக் கொட்டைக்கு நாளது தேதி விலை 1060 ராத்தல் கண்டி விலை ரூபா 64—8; பருப்பிற்கு 500-ராத்தல் கண்டி ரூபா 41—8—0.

ஆமணக்கு.

16—6—1913.

மார்கட் அமரிக்கையா யிருக்கிறது. புதிய பேரம் யாதொன்றும் நடக்கவில்லை. உள்ளூர் ஆலைகளில் நசுக்கப்படுவதற்காக உபாய பேரம் நடந்து வருகின்றது. சென்ற வார முதல் விலையில் மாறுதல் இல்லை. (ஒரு மூட்டை ஒன்றுக்கு ரூ. 10-2-0 முதல் ரூ. 10-4-0 சென்ற வாரவிலை)

கடுகு.

9—6—1913.

மார்க்கட் சுறுசுறுப்பாயில்லை. அன்னியதேச விசாரணை மந்தம். உள்ளூர்த் தேவைக்காக உபாய பேரமட்டிலும் நடந்து வருகிறது. ராஜம்பேட்டை சரக்கிற்கு நாளது தேதி விலை ரூ. 40-41.

16—6—1913.

மார்க்கட் உறுதி சின்னரகச் சரக்கு அதிகமாக கையிருப்பில்லை. சின்னரகச் சரக்கிற்கு உள்ளூரில் நல்ல கிராக்கி யிருக்கிறது. விலை ரூ. 2 ஏறி யிருக்கிறது. சின்ன ரகத்திற்கு ரூ. 43 ஆகவும், பெரிய ரகத்திற்கு ரூ. 37 ஆகவும் பேரம் நடந்திருக்கிறது.

வெங்காயம்.

16—6—1913.

மார்க்கட் உறுதியா யிருக்கிறது. பினாங்கிலிருந்தும் சிங்கப்பூரிலிருந்தும் நல்ல கிராக்கி வருகிறது. ரெயில்வே கட்டுப்பாடு தொந்திரவு முடிந்தபின்பு சரக்குகள் கொஞ்சம் கொஞ்சமாக இப்போதுதான் வந்துகொண்டிருக்கிறது. சமீப காலத்தில் விலை இறங்குமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. பினாங்கு சிங்கப்பூருக்கு உபாய ஏற்றுமதி. பெல்லாரிச் சரக்கிற்கு ரூ. 14-8-0 யாகவும் தாட்பத்திரி ரூ. 16-0-0 ஆகவும் நாளது தேதி விலை.

உருளைக் கிழங்கு

விலையில் ரூபாய் 2 இறங்கி யிருக்கிறது. மற்ற பாபத்துகளில் சென்றவார மாதிரியாக விருக்கிறது.

கோத்தமல்லி.

9—6—1913.

20 ஆயிரம் மூட்டை கையிருப்பு, விசாரணையிருக்கிறது. கண்டி ஒன்றுக்கு $5\frac{1}{2}$ முதல் 6 வராகன் நாளது தேதி விலை.

16—6—1913.

ரிப்போர்ட் செய்யப்படும்படியான மாறுதல் இல்லை.

சாக்குகள்.

9—6—1913.

விலை வாசிகளில் மாறுதல் இல்லை.

16—6—1913

மார்க்கட் மந்தம். B. குவில் தினுசில் உபாய பேரம். 44×28 H. C. தினுசின் நாளது

தேதி விலை ரூ. 40; 40×28 தினுசின் விலை ரூ. 36 L. C. 44×28 ரூ. 38; 40×28 ரூ. 35 உப்புச் சரக்குகள் 40×24 ரூ. 30. B. டுவில் 44×26½ ரூ. 36. சிட்டிலால் சா 44×28 ரூ. 41.

16—6—1913.

தேக்கு.

மார்க்கட் உறுதியா யிருக்கிறது 100-க்கு 5 விலை ஏறி யிருக்கிறது, சமீப காலத்தில் விலை இறங்கு மென்று எதிர் பார்க்கிறார்கள். பம்பாய் வியாபாரிகளும் அப்படியே எதிர்பார்க்கிறார்கள். 2—1 & 2—½ அளவு (Short Lengths) ரூபா 135-க்கு அகப்படுகிறது. Long Lengths அகப்படுகிறதில்லை. 3—1½-க்கு விலை அதிகமாகச்சொல்லுகிறார்கள். வியாபாரிகள் அதற்கு ஆர்டர் கொடுக்கிறதில்லை.

அரிசி.

16—6—1913.

மார்க்கட் மந்தம். நெல்லூர் அரிசிக்கு திருப்பூரிலிருந்து விசாரணை; 29-படிகொண்ட ஒரு மூட்டை ரூபா 7—8—0 வீதம் 1000 மூட்டைகள் கிரயம் செய்யப்பட்டன. மேஜை அரிசிக்கு விஜயநகரத்தில் 2-அணு விலை ஏறியிருக்கிறது. இவைகள் பட்டணம் வருகின்றன. 164 ராத்தல்கொண்ட ஒரு மூட்டைக்கு ரூபா 11—4—0 சொல்லப்படுகிறது. புழுங்கல் அரிசியின் விலையில் மாறுதலில்லை. நாளது விலை :—குச்சிலாடி 168-ராத்தல்கொண்ட ஒரு மூட்டை ரூபா 10—12—0; நெல்லூர் 29-படி) ரூபா 7—8—0 ரூபா 7—12—0. தென்னுலி (40-படி) ரூபா 8—8—0 ரூபா 8-12-0.

இரும்பு.

16—6—1913.

மார்க்கட் மந்தம். நாணய மார்க்கட்டின் கசாலாவும் சீமை மார்க்கட்டின் கீழ் நோக்கமும் மிகுந்த கை யிருப்பும், புதியசரக்குகள் வரவை அதிசீக்கிரத்தில் எதிர் பார்ப்பதும் மந்தத்திற்குக் காரணங்கள். மார்க்கட் இன்னும் கீழே போகுமென்று வாங்குகிறவர்கள் தாமதிக்கிறார்கள்.

ரெயில்வே கட்டுப்பாடும் இரும்பு வியாபாரத்தை பாதித்திருக்கிறது

உலோகங்கள்.

நல்லகிராக்கி. சீமை மார்க்கட் கீழ் நோக்கமாயிருக்கிறது. ஆகையால் லோக்கல் மார்க்கட்டும் அப்படியே.

நிலக்கரி.

16—6—1913.

கையிருப்பை முன்னிட்டு விலை இறங்கியிருக்கிறது.

கற்பூரம்.

16—6—1913.

மார்க்கட் சுமார். மட்டச்சரக்கு கையிருப்பு தொடர்ந் தேர்த்தியாயிருக்கிறது. பலகை மிதமாய் விற்றுக்கொண்டிருக்கிறது.

சிமின்ட்.

16—6—1913.

உள்ளூர் மார்க்கட் மந்தம், கையிருப்பு கரைந்து கொண்டிருக்கிறது.

நாணயமார்க்கட்

9—6—13.

மதிராஸ் பாங்க்	7 வட்டி	3—6—1913ல்
பாம்பே பாங்க்	6 ,,	29—5—1913ல்
கல்கத்தா பாங்க்	5 ,,	5—6—1913ல்
இங்கிலாண்டு பாங்க்	4½ ,,	17—4—1913

கவர்ன்மெண்டு பத்திரம்.

3½-வட்டி கவர்ன்மெண்டு பாண்டு 4-6-1913ல் ரூபா 96—12—0 இருந்தது.

சில மாறுதல் அடைந்து இப்போது ரூபா 96—8—0.

——(:o:)——

TRADE.

வியாபாரம்.

India's Trade with England.

இங்கிலாந்துடன் இந்தியா செய்யும் வியாபாரம்.

சென்ற ஏப்பிரல்மீ 28உ லண்டன் நகர் யூனிவர்சிட்டி கலாசாலையில் பி. ஏ. பரிக்ஷைகளில் தேறினவர்களின் தொழில் வாழ்க்கையைக் குறித்து மிஸ்டர் S. M. மித்திரா என்பவர் ஒரு உபன்னியாசம் செய்தனர். இதற்கு முந்தி பம்பாய் ராஜதானிக்கு கவர்னராயிருந்த லார்ட் ரே அவர்கள் அக்கிராசனம் வகித்துக் கொண்டனர். மிஸ்டர் மித்திராவை சபையிலுள்ளவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கும் போது, இந்தியாவுடன் வியாபாரம் செய்பவர்கள் இந்தியாவினுடைய தேவைகளை அறிந்து கொள்ளப் பிரயத்தனப் படவேண்டுமென்று மிஸ்டர் மித்திரா ஞாபகப் படுத்திக்கொண்டே வந்தார் என்றும் இந்தக் கொள்கையைப் பின் பற்றி ஜெர்மானியர்கள் இந்தியாவுடன் வியாபாரம் செய்து வந்ததில் மிகவும் ஜெயம்பெற்றிருக்கிறார்கள் என்றும் சொன்னார்.

இதன்பின்பு, மிஸ்டர் மித்திரா உபன்னியாசம்செய்ய ஆரம்பித்து கிரேட் பிரிட்டன் செய்யும் வியாபாரத்திற்குள் இந்தியாவுடன் செய்யும் வியாபாரந்தான் முதன்மையாயிருக்கின்றதென்றும் பிரிடிஷ் ராஜ்ஜியம்உள்ள காலம்வரையில் அப்படியே இந்தியாவுடன் செய்யும் வியாபாரம் முதன்மையா யிருக்குமென்று சொன்னார். கிரேட் பிரிட்டன் இந்தியாவுடன் அல்லது இந்தியா கிரேட் பிரிட்டனுடன் செய்யும் வியாபாரத்திற்குத் தீர்வை இடஞ்சல் கிடையாது. பிரிடிஷ் ராஜ்ஜியத்தின் முழு வியாபாரத்தின் பத்தில் ஒரு பங்கு 6 இந்திய துறைமுகப் பட்டணங்கள் வழியாகச் செல்லுகின்றன. இந்தியா சமுத்திரமூலியமாக பிரிடிஷ் ராஜ்ஜியத்திற்குள் செய்யும் வியாபாரம் பிரிடிஷ் ராஜ்ஜியம் செய்யும் வியாபாரத்திற்கு இரண்டாவதாய் நிற்கின்றதென்று சொல்லவேண்டும். கிரேட் பிரிட்டனின் ஐக்கியநாடுகள் எல்லாம் ஒன்றாகச் சேர்த்தால் எவ்வளவு வியாபாரம் செய்கிறதோ அதற்குமேல் அதிகமாக இந்தியா இங்கிலாண்டுடன் வியாபாரம் செய்து வருகிறது. உலகத்தில் மற்ற தேசங்களைவிட இந்தியாவில் கூலி வேலைக்காரர்கள் நயம். இந்திய மார்க்கட்டுகளில் இங்கிலாண்டிற்கு போட்டியாய் நிற்பவர்கள் ஜெர்மானியர்கள். ஜெர்மானியர்கள் வெற்றி பெறுவதற்குக் காரணம் என்னவென்றால் அவர்கள் செய்யும் காரியங்களைப் பூர்த்தியாய்ச் செய்யும் இயல்புடையவர்கள். ஜெர்மனியில் "சமாசார ஆபீஸ்" ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தியாவில் ஒரு துறைமுகத்திற்குச் சரக்கு அனுப்பவேண்டியதற்கு என்ன செலவாகுமென்று அறிந்துகொள்ள ஒருவன் விரும்பினால் ஒரு நொடிப்பொழுதில் மிகுந்த சொற்பச் செலவில் அறிந்துகொள்ளக்கூடும். அந்த ஆபீசுகளில், கேட்ட நிமிஷத்தில் கணக்கு சொல்லுவதற்காக இந்தியா 400 பாகங்கள் அதாவது பிரிடிஷ் இந்தியா 250 சுதேச அரசாங்கங்கள் 150 பிரிவுகளாகப் பிரிவினை செய்யப்பட்டிருக்கின்றது. அந்த தேசத்தில் (இங்கிலாண்டில்) அப்படி சமாசாரங்கள் அறிவிக்கக்கூடிய ஆபிசுகள் யாதொன்றும் வர்த்தகர்கள் உபயோகத்திற்காக ஸ்தாபிக்கப்படவில்லை. இதன்பயன் என்னவென்றால் ஜெர்மானியர்கள் பச்சைச்சரக்கை தருவித்து அல்லது இயற்கைப்பொருளை நம்முடைய ஐக்கிய நாட்டிலிருந்து தருவித்து செயற்கைப்பொருளாக மாற்றி அவைகளை மறுபடியும் மூட்டை மூட்டையாய் நம்முடைய தேசத்திற்கே அனுப்பி விடுகிறார்கள்.

சர்வ கலாசாலையில் பி.ஏ. பி.எல். பரிக்ஷைகளில் தேறுபவர்கள் மனிதர்களாகவிருந்தாலும் சரி அல்லது ஸ்திரீ ஜாதியாயிருந்தாலும் சரி

அவர்கள் இந்தியாவுடன் வியாபாரம்செய்து லாபம் சம்பாதிப்பதற்கு ஒருவழி யிருக்கிறது. அந்தவழி என்னவென்ருல், ஜெர்மானியர்கள் பின்பற்றி வெற்றி அடைந்திருக்கும் "சாஸ்திர முறையாய் வியாபாரம் செய்தலாம்" இப்படி இவர்கள் செய்வார்களேயானுல் அத்தேசத்திற்கு அதாவது இங்கிலாண்டிற்கு நன்மை செய்வதுடன் இந்தியாவிற்கும் நன்மைசெய்தவர்களாவார்கள் என்று சொல்லி உபன்னியாசத்தை முடித்தனர்.

இதன்பிறகு சர் ஜியார்ஜ் பெர்ட்வுட் என்பவர் உபன்னியாசம் செய்தவரின் அபிப்பிராயங்களை ஏற்றுக் கொள்ளுவதாகவும் தாம் இந்தியா ஆபீசில் உத்தியோகம் பார்த்தபோது சர்வ கலாசாலையில் படிப்படைந்தவர்கள் வியாபாரத்தொழிலில் புத்தி செலுத்தி வரவேண்டுமென்று மிஸ்டர் மித்திரா சிபார்சு செய்வார் என்று தாம் எதிர்பார்த்திருந்ததாகவும் சொன்னுர். இத்துடன்கூட, மேற்கு லண்டன் நகரில் ஷாப்புகளில் ஜன்னலை அலங்கரிப்பவனும் சாமான்களை விற்பனை செய்பவனும் சாமானிய மானவனல்ல! ஆனுல் ஈட்டன் என்கிற பிரசித்திபெற்ற பள்ளிக்கூடத்தில் படிப்படைந்திருக்கும் படிப்பாளி என்றும் சொன்னுர்.

Madras Iron Trade.

சென்னையில் இரும்பு வர்த்தகம்.

:(*):

சென்னை ஜியார்ஜ்டவுன் ராசப்பசெட்டி தெருவிலிருக்கும் இரும்பு வர்த்தகர்களுக்கும் சென்னை முனிசிபாலிடிக்குமுள்ள தகராரைப் பற்றி ஏற்கனவே நம்முடைய "சென்னை வியாபாரியில்" நாம் எடுத்தெழுதியிருந்தது நம் நேயர்களுக்கு ஞாபக மிருக்குமென்று நம்புகின்ரேம். மேற்படி ராசப்ப செட்டிதெருவு மிஸ்டர் K. C. தேசிகாச்சாரியார் அவர்கள் கமிஷனராக விருக்கும் டிவிஷனைச் சேர்ந்தது. ஆகையால் கடந்த மேமீ 20௳ கார்ப்பொரேஷன் மீடிங்கில் அடியிற்கண்ட தீர்மானத்தைப் பிரரேபனை செய்தனர்:—

"ஜியார்ஜ்டவுன் இரும்பு வர்த்தகத்திற்கு இடஞ்சலுண்டாகாமலிருக்கும் நோக்கத்துடன், ராசப்பசெட்டி தெருவில் இரும்புக்கடைகளுக்கு முன்னிலிருக்கும் நிலத்தில் 4 அடி நிலம் 100 சதுர அடி ரூபாய் 5 மேனிக்கு 1913௵ ஜுலை 12௳ ஆரம்பமாக மூன்றுவருஷகாலத்திற்கு இரும்பு வர்த்தகர்களுக்கு குத்தகை விடுவதாக கமிஷனர்கள் தீர்மானிக்கிருர்கள்." இந்தத் தீர்மானத்தை பிரரேபனை செய்யும்போது மிஸ்டர் K. C. தேசிகாச்சாரியார் அவர்கள் இரும்பு வர்த்தகர்கள் அந்தநிலத்தை கொஞ்சகாலமாக அனுபவித்துக்கொண்டு வந்தார்கள் என்றும் ஸ்டாண்டிங் கமிட்டியார் குத்தகை கட்டணத்தை உயர்த்திவிட்டார்கள் என்றும் இது விரும்பக்கூடிய செய்கையல்லவென்றும் சொன்னுர். சென்னப்பட்டணம் இரும்புவர்த்தகம் முழுதினும் அந்த ஸ்தலத்தில் நடத்தப்பட்டு வருகிறதென்றும் ஆகையால் கார்போரேஷன், இரும்பு வர்த்தகர்களைத் தொந்திரவு செய்யமாட்டாதென்றும் ஒரு முக்கியமான வியாபாரத்திற்கு, இடஞ்சல் செய்யமாட்டாதென்றும் தாம் நம்புவதாய்ச் சொன்னுர்.

மிஸ்டர் S. சல்லா குருசாமி செட்டியார் இந்த தீர்மானத்தை அங்கீகரித்துப் பேசினுர்.

மிஸ்டர் A. C. பார்த்தசாரதி நாயுடு இந்த வர்த்தகர்கள் இந்த ரோட்டை உபயோகப்படுத்திக் கொள்ளுவதால் வண்டிகள் போக்குவரத்திற்கு இடஞ்சலா யிருக்கிறதென்று எடுத்துப் பேசினுர்.

மிஸ்டர் P. M. அப்பாசாமிப்பிள்ளை இந்தத் தெருவு இரும்புவர்த்தகர்ளால் மட்டினும் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறதென்றும் அதில்

குடியிருக்கும் ஜாகைகள் கிடையாதென்றும் ஆதலால் அவர்கள் அந்த நிலத்தை உபயோகப் படுத்தி வருவதற்கு ஆக்ஷேபனை யிருக்கமாட்டாதென்றும் சொன்னார்.

பிரசிடெண்டு பேசினது:—"வண்டிகள் போக்குவரத்திற்கு இடஞ்சல் படுகிறதென்பதில் சந்தேகமில்லை; போலிஸ் டிப்டிகமிஷனர் மிஸ்டர் கன்னிங்ஹாமும் அப்படியே அபிப்பிராயப் படுகிறார். வர்த்தகர்கள் ரோடில் இரும்பைப் போட்டு வைத்திருப்பதால் தாம் சாக்கடையை சுத்தமாக வைத்திருக்கும்படி செய்ய முடியவில்லை என்றும் புகார் செய்திருக்கிறார். ஆயினும் இரும்பு வர்த்தகம் முக்கியமான வர்த்தகமென்று தெரிவித்துக் கொள்ளப்பட்டது. அவர்களை அவ்விடம்விட்டு விலக்க திடீரென்று ஏற்பாடு செய்வது அவர்களுக்கு அசௌகரியமாக விருக்குமென்றும் அறிவித்துக் கொள்ளப் பட்டது. ஆகையால் இப்போது கார்போரேஷன் செய்யக்கூடியதெல்லாம், மிஸ்டர் தேசிகார் செய்த ப்ரரேபனையில் "மூன்று வருஷம்என்கிற பதங்களை எடுத்துப்போட்டு "ஒரு வருஷம்" என்கிற பதங்களைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் அதாவது 1913 ஜூலை ஆரம்பமாக ஒருவருடத்திற்கு ஷை நிலம் குத்தகை விடப் படும் என்பது தாத்பரியம் என்று சொல்லி பிரரேபனை செய்ய," மிஸ்டர் ராமராவ் அங்கிகரித்துப்பேச, பெரும்பாலான சமிஷனர்கள் ஷை பிரசிடெண்டின் பிரரேபனைக்கு வோட்டுக் கொடுக்க, அத் தீர்மானம் ஏற்றுக்கொள்ளப் பட்டது.

Indian Opium Trade.
இந்தியாவின் அபின் வியாபாரம்.

அவுஸ் ஆப் காமன்ஸ் சபையில் சென்ற ஏப்ரல்மீ 7௳ ரெவரெண்டு J. T. ஜோன்ஸ் என்கிற மெம்பர் இந்தியா, சீனாவுக்கு அபின் சப்ளை செய்வது சன்மார்க்கத்திற்கு விரோதமான காரியமென்றும் ஆதலால் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் அபினை சீனா ஏற்றுக் கொள்ள வேண்டியதென்று கட்டுப்பட்டு சீனா எழுதிக் கொடுத்திருக்கும் உடன்படிக்கையிலிருந்து சீனாவை விலக்கிவிட வேண்டுமென்றும் உடன்படிக்கையில் காணப்பட்ட துறைமுகங்களில் சேர்ந்திருக்கும் அபின் பெட்டிகளை சீனா இறக்குமதி செய்வதைத் தடுத்துவிட வேண்டுமென்று ஒரு பிரரேபனை செய்தார்.

இது விஷயமாக சபையில் பெரிய தர்க்கம் நடந்தது. அப்போது மிஸ்டர் மான்டேக் அடியிற்கண்டபடி பேசினார். சீனா கவர்ன்மெண்டார் இந்தியாவிலிருந்து அபின் இறக்குமதி செய்யப்படுவதை அடியோடு நிறுத்திப்போட வேண்டுமென்று சொல்லவில்லை. வருஷாவருஷம் அந்த இறக்குமதியை குறைத்துக்கொண்டுவந்து 1916-ம் வருடத்துடன் அடியோடு நிறுத்திவிடத் தீர்மானித்திருப்பதாகவும் அதற்கு பிரிடிஷ் கவர்ன்மெண்டார் உடந்தையாயிருக்கவேண்டுமென்று நமக்கு எழுதினார்கள். சீனா கவர்ன்மெண்டார் கேட்டுக்கொண்டபடியே 1907-ம் வருடத்திய உடன்படிக்கை 1911-ல் சீர்திருத்தப்பட்டது. நான்கு நூற்றாண்டுகளாக நடந்துவந்த இந்த வியாபாரம் 1916-ம் வருடத்துடன் முற்றுப்பெறும். உடன்படிக்கையில் காணப்பட்ட துறைமுகங்களில் 20 ஆயிரம் அபின் பெட்டிகள் கையிருப்பிருக்கிறதென்பது வாஸ்தவம்தான். இப்படி கையிருப்பிருப்பதைக்கொண்டு அப்பெட்டிகளை இறக்குமதிசெய்ய சீனா கவர்ன்மெண்டார் மனமற்று உடன்படிக்கை ஷரத்துகளைப் புறக்கணிக்க எண்ணமுடையவர்களாக விருக்கிறார்கள் என்று நாம் நினைக்கக்கூடாது. ராஜரீகத்திற்கு உட்பட்டுவந்த தேசம் குடி அரசாய் மாறினதால் நேர்ந்த தொந்திரவுகளை முன்னிட்டு அப்பெட்டிகள் செலவிடப்படாமல் அவ்

விடங்களிலேயே யிருக்கின்றன. அவைகள் ஒரு வருஷத்திற்குள் செலவாய்விடும். அதன்பிறகு இன்னும் 26,781 பெட்டிகள் சீனுவுக்கு சப்ளை செய்ய உடன்படிக்கையின்படி நாம் பாத்திய தையுடையவர்களாகவிருந்தும், அபின் விளை யும் சீனுவின் மாகாணங்களில் அபின் விற்பனை செய்ய நமக்கு பாத்தியதையிருந்தும்......... மேலேகண்ட பெட்டிகளை விற்பனை செய்வதால் 111 லக்ஷரூபாய் நமக்கு வருமானம் கூடிவரக் கூடியதாயிருந்தும், இந்த வருஷத்திற்குமட்டி லுமல்லாமல் எப்போதுமே சீனுவுக்கு அபின் அனுப்பாமலிருப்பதற்கு நாங்கள் தயாராயிருக் கின்றோம்.

இப்போதுகூட இந்தியா சீனுவுக்கு ஒரு அவுன்ஸ் அபின்கூட சப்ளை செய்கிறதில்லை. இந்தியாவின் கவர்ன்மெண்டார் சீனு கவர்ன் மெண்டை உதவி செய்வதற்காக வரவு செலவு திட்டக் கணக்கிலிருந்து அபின் வருமானத் தை நீக்கி விட்டார்கள். சீனு கவர்ன்மெண்டு கேட்டுக்கொண்டபடி பிரிடிஷ் கவர்ன்மெண்டு உதவிசெய்தது பிரிடிஷ் பொதுஜனங்கள் எல் லோருக்கும் சம்மதமாக விருக்குமென்று நான் நம்புகின்றேன். நம்முடைய பிரதிநிதிகளாகிய இந்தியா கவர்ன்மெண்டார் பெரிய வருமானத் தை இழந்துவிட சந்தோஷத்துடன் சம்மதித்த தற்காக நாம் அவர்களுக்கு வந்தனம் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம்.

———:‡:———

Bombay Timber Market.
பம்பாயில் தேக்கு வியாபாரம்.

———

பர்மா, மோல்மீன், பங்காக், சீயம், மலையாளம் முதலிய விடங்களில் தேக்குமரத்தின் விலை 100-க்கு 60 உயர்ந்துபோயிருப்பதை முன்னிட்டுப் பம்பாய் மார்க்கட்டில் ஒரு படபடப்பு உற்பத்தியாயிருக்கின்றது. 1912-ல் பர்மாவில் மழை பெய்யாதது, விலை உயர்ந் திருப்பதற்குக் காரணமாகச் சொல்லப்படு கிறது. வெட்டப்பட்ட தேக்குகளை நதியின் படுகையில் போட்டு வைக்கிற வழக்கம். மலை யில் மழை பெய்து நதியில் வெள்ளப்பிர வாகம் உண்டாகும்போது அந்தப் பிர வாகம் இந்த மரங்களை அடித்துக் கொண்டுபோய் தேக்கு அறுக்கும் சாலைகளில் தள்ளிவிடுவது வழக்கம். சென்ற வருடம் வெட்டப்பட்ட மரங்கள் போட்டவிடத்திலேயே கிடக்கின்றன. ஆதலால் பம்பாயில் கையிருப்பு சூன்யமாய்ப் போய்விட்டது. பொருக்கி எடுக்கப்பட்ட தேக்கு ஐரோப்பாவிற்கு அனுப்பப்படுவது வழக்கம். அந்தவகைத்தேக்கு இப்போது அகப்படாமலிருப்பதால் ஐரோப்பாவிற்கு ஏற் றுமதி செய்ய முடியவில்லை. 6 மாதங்களுக்கு முந்தியிருந்த விலையுடன் இப்போதிருக்கும் விலையையும் சீர்தூக்கிப் பார்த்தால் முதல் நெம் பர் தேக்கு டன் ஒன்றுக்கு ரூ. 160 முதல் ரூ. 179 ஆகவிருந்தது, ரூ. 350 முதல் ரூ. 400 வரையில் விலையாகி வருகின்றது. டன் ஒன் றுக்கு ரூ. 130-க்கு விற்பனையாகி வந்த தேக் குத் துண்டுகள் (Logs) இப்போது ரூ. 195 முதல் ரூ. 200 வரையில் விற்றுவருகின்றன. இரண்டாவது நெம்பர் தேக்குமரம் டன் ஒன் றுக்கு ரூ. 125 ஆக விருந்தது ரூ. 175-க்கு விலை ஏறி விற்கின்றது.

"அட்வோக்கேட் ஆப் இந்தியா" என்கிற பத்திரிகை" எழுதுகின்றது :—

பர்மாவில் விலை நாளுக்கு நாள் ஏறிக்கொண் டிருக்கிறது. விலை ஏற்றம் எவ்வளவு கால மிருக்கும் என்று இப்போது சொல்லக் கூட வில்லை. ஐரோப்பாவிற்கு ஏற்றுமதி செய்யப் படும் "பொருக்குத்" தேக்கு இப்போது கையிருப்பில்லை. ஆகையால் மார்க்கட்டின் தற் கால நிலைமையைப்பற்றி யாதொன்றும் நிச்சய மாய்ச் சொல்லமுடியவில்லை. தேக்கு அரசன் என்று சொல்லப்பட்டு வரும் "மியான் முகமத்

ஹாஜிஜான் சோட்டானி" என்பவர் பம்பாய் போரிபந்தரிலிருக்கும் அவருடைய வாடியில் அதிர்ஷ்டவசமாய் விசேஷ சரக்கு கையிருப்பு வைத்திருந்தார். ஜி. ஐ. பி. இருப்புப்பாதை கம்பெனியார் இப்போது ஏதோ ஒரு பெரிய வேலை நடத்துவதற்காக தேக்கு வாங்க விரும்பினார்கள். மிஸ்டர் சொட்டானி முன்வந்து வேண்டிய அளவு கம்பெனியாருக்கு சப்ளை செய்தார்.

மிஸ்டர் சோட்டானி தம் கையிருப்பு சரக்கை இப்போது உயர்ந்த விலைக்கு விற்று வருகிறார் என்றும் இதுவரையில் பத்துலக்ஷ ரூபாய் லாபம் அடைந்திருக்கிறார் என்றும் கேள்விப்படுகின்றோம்.

பாக்டாட் பீர் சாயப்பு சையத் இப்ராம் என்கிற முகமதிய குரு பம்பாயிக்கு வந்திருந்தபோது மிஸ்டர் சோடானியின் விருந்தினராக விருந்தனர். அம்மகானின் அனுக்கிரகத்தாலும் ஆசீர்வாதத்தாலும் இந்த லாபம் கிடைத்ததென்று மிஸ்டர் சோட்டானி சொல்லுகின்றார். தேக்கு விலை உயர்ந்திருப்பது மாவேலை செய்பவர்களைப் பாதித்திருக்கிறது. மரசாமான்களின் விலை ஏறி நிற்கின்றது.

Circars and Port Facilities.

சர்க்கார் மாகாணமும் துறைமுக வசதிகளும்.

[சென்ற மேமீ 26உ கூடிய "ஆந்திரா" கான்பரன்சில் பிரசிடெண்டாகவிருந்த ஆனரபில் மிஸ்டர் B. N. சர்மா ஆரம்ப பிரசங்கத்தில் "சர்க்கார்" மாகாணத்தில் துறைமுகவசதிகள் போதுமானபடி யில்லாததைக் குறித்துப்பேசி அடியிற் கண்டபடி ரிமார்க்கு செய்திருக்கின்றனர்:—

ஐதராபாக்கம், மத்திய மாகாணம், இன்னும் கப்பம் கட்டும் அனேக சமஸ்தானங்களில் உற்பத்தியாகும் தானியங்களுக்கு கீழ் கரையிலிருக்கும் துறைமுகங்கள் தான் வடி மதகுகள் அதாவது அவைகள் வழியாகத்தான் அன்னிய ஊர்களுக்குக் கொண்டுபோகப் படவேண்டும். மேலே சொல்லப்பட்ட சமஸ்தானங்களையும் சர்க்கார் மாகாணத்துடன் சேர்த்துவிட்டால் மத்திய தக்ஷணத்தின் கீழ்பாகத்தின் பொருளாதார நிலைமை மிகவும் பலமாய் பலப்படும். மத்திய மாகாணத்திலும் பீராரிலும் பருத்தி 40 லக்ஷம் ஏக்ராவில் அதாவது சென்னை ராஜதானிக்கு இரண்டுபங்கு அதிகப்படியான விஸ்தீரணத்தில் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றது. போதுமானபடி போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டிருந்தால் ஷை தானியங்களின் பெரும்பாகம் கீழ் கரைக்கு வந்து சேரும், கல்கத்தாவிற்கும் சென்னைக்கும் மத்தியிலுள்ள கடல் கரை 800 மயில் தூரமுடையது; அப்படி யிருந்தும் அந்தக் கரையில் ஒரு துறைமுகம்கூட ஸ்தாபிக்கப்படவில்லை. துறைமுக அனுபோகமுடைய மகா வல்லமைசாலிசளான நிபுணர்கள் ஒருஆர்பார் (கப்பல் வரவும்தங்கியிருக்கவும் போகவும் வசதியுடைய விடம்) கட்டுவதற்கு விசாகப்பட்டணம் தகுந்த துறைமுகம் என்று தெரிந்தெடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஸ்டீமர்கள் ஏற்பட்டு கடல் கரையோர வியாபாரத்தைக் கொல்லுவதற்கு முந்தி கப்பல்கள் அந்நகரத்தில் தான் செய்யப்பட்டு வந்தன. அந்தவிடத்தில் ஆர்பார் கட்டுவதால் சென்னை துறைமுகத்தின் வியாபாரம் குன்றிப்போகும் என்று நினைப்பதற்கு யாதொரு காரணமுமில்லை. தேசத்திற்கு நன்மை விளையக்கூடிய ஒரு விஷயத்தில் எந்த ஐக்கியநாட்டுக்கவர்ன்மெண்டாரும் நம்முடைய கவர்ன்மெண்டாரைப்போல அலக்ஷியமா யிருந்திருக்கமாட்டார்கள். அந்தத் துறைமுகத்தில் இப்போது வியாபாரம் அற்பமாய் நடந்துவரு

வதின் காரணம் என்னவென்றால் மேற்சொல்லப்பட்ட இடைஞ்சல்களே யொழிய மற்றப் படி வேறல்ல; அந்த துறைமுகத்தின் இயற்கையான அமைப்பின் பயனை நாம் அடைய வேண்டிய காலம் வந்துவிட்டது. ஆகையால் அதுவிஷயம் தீவிரத்தில் கவனிக்கப்படவேண்டும். தினே தினே ஜெயம்பெற்றுவரும் காக்கிநாடு துறைமுக விஷயத்திலும் சமுத்திர இலாகாக்காரர்கள் கவனம் செலுத்தி இன்னும் விருத்திசெய்து வரவேண்டும். போக்கு வரத்து வசதிகள் செய்யப்படுவதின் நன்மையை நாம் எல்லோரும் அறிந்து கொண்டிருக்கிறோம். அவசியமான ஏற்பாடுகளில் ஜில்லா போர்டார்கள் கலந்து செய்யவேண்டிய முயற்சிகளைச் செய்வார்கள் என்று நாம் எதிர்பார்ப்பது வீணல்ல. "சிங்கரேணி நிலக்கரி சுரங்கம்" நம்முடைய ஜில்லாக்களின் மத்தியில் அமைந்திருந்தும் அப்படியிருப்பதின் நன்மைகளை நம்முடையதுறைமுகங்கள் அடையவில்லை. அதன் சமீபத்திலும் அக்கம் பக்கத்திலும் உலோகங்களிருக்கின்றனவென்று நாம் கேள்விப்படுவது பிசகல்ல. அப்படியிருந்தும் நம்மவர்களுக்குள் எவ்வளவோ வியாபாரிகள், முதலாளிகள் பலமான பூஸ்திதி உடையவர்களும் கவர்ன்மெண்டாருமிருந்தும் நம் ஜில்லாக்களினுடைய உலோக பொருளாதார நிலைமையை ஆராய்ச்சி செய்யாம லிருப்பதும் சொற்ப ஜனங்களுக்காவது சுரங்கப் படிப்பு கற்பித்துவைக்க வசதி செய்யாமலிருப்பதும் நம்மைப்பிடித்த துர் அதிர்ஷ்டம்.

[கெஞ்சம், விஜாகபட்டணம், கோதாவரி, கிருஷ்ணா இந்த நான்கு ஜில்லாக்களுக்கும் "சர்க்கார்"என்பது ஒரு பொதுப்பெயர். ப-ர்.]

American Shipments.

ஆமெரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு நேர் ஸ்டீமர்கள்.

பக்நால் அமெரிக்கன் இந்தியன் லயன் ஸ்டீமர் கம்பெனிக்காரர்கள் ஏற்கனவேயிருக்கும் கப்பல் கூட்டத்திற்கு 6 புதிய சரக்கு ஸ்டீமர்கள் சேர்த்து அமெரிக்காவிலிருந்து நேரே இந்தியாவிற்கு விட்டுவருகிறதாக சென்னப்பட்டணத்திலிருக்கும் அமெரிக்கா அரசாங்கப் பிரதிநிதி அமெரிக்காவிலிருக்கும் வாஷிங்டனில் பிரசுரமாகும் "டேய்லி கான்சுலர் அண்டு டிரேடு ரிப்போர்ட்" என்று சொல்லும்படியான பத்திரிகைக்கு எழுதி யிருக்கின்றனர்.

இந்தவகை ஸ்டீமர்களில் முதல்ஸ்டீமர் இப்போதுதான் சென்னப்பட்டணம் துறைமுகத்திற்கு வந்திருக்கிறது. அதற்கு "கென்டெக்கி என்று பெயர். 11 ஆயிரம் டன்பளுவு சுமக்கக்கூடியது. ஸ்டீமரில் சரக்குகளை ஏற்றவும் இறக்கவும் விரைவில் வேலைசெய்யும் 'கிரேன்" என்று சொல்லும்படியான யந்திரங்கள் அமைக்கப்பட்டிருக்கிறது. 50 டன் பாரத்தை ஒரே சமயத்தில் தூக்கக்கூடியதாம். சரக்குகளின்பேரில் காற்றுப் படும்படியாக உபாயங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. தீ பிடித்தால் அதை அணைக்க நூதனமாய் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் நெருப்பவிக்கும் இன்ஜின்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. தந்தி கம்பியற்ற தந்தியும் அமைக்கப்பட்டிருக்கிறது.

Financing District Board Railways.

ஜில்லா போர்டு இருப்புப்பாதைகளுக்கு மூலதனம் ஏற்பாடு செய்தல்.

ஜில்லா போர்ட்டு இருப்புப்பாதைகளுக்கு மூலதனம் ஏற்பாடு செய்வதைக் குறித்து கவர்ன்மெண்டார் இப்போது உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள். இது விஷயமாக எல்லா ஜில்லாபோர்டு பிரசிடெண்டுகளும் ஒரு கூட்டம் கூடி ஆலோசனை செய்து அறிவிக்கும்படியாக கவர்ன்மெண்டாரால் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். உத்தேசத்திலிருக்கும் இருப்புப்பாதைகளை போட்டுமுடிக்க "செஸ்" வரிவசூலை எதிர்பார்த்துக் கொண்டிருந்தால் தாமதப்படுமென்றும் ஆகையால் டிபன்சர் கடன் வாங்கலாமா என்று பிரசிடெண்டுகள் கூடி யோஜனை செய்ய வேண்டுமென்று கவர்ன்மெண்டார் அவர்களுக்கு எழுதி யிருந்தார்கள். 100-க்கு $4\frac{1}{2}$ வட்டி டிபன்சர் கடன் வாங்கி இருப்புப்பாதைகளை கட்டலாம் என்று பிரசிடெண்டுகள் பதில் எழுதியிருந்தார்கள். கவர்ன்மெண்டாரும் அங்கீகரித்துக்கொண் டிருக்கிறார்கள். கவர்ன்மெண்டார் மூலதனத்திற்காக ஒரு முடிவான ஏற்பாடு செய்யும்பொருட்டு, எந்தெந்த போர்டார் இருப்புப்பாதைகள் போட உத்தேசித்துக் கொண்டிருக்கிறார்களோ அவர்களுடைய அபிப்பிராயங்களை அறிந்துகொள்ள விருப்பமுடையவர்களாக விருப்பதாக அறிவித்தார்கள். அதன்பேரில் அடியிற்கண்ட அபிப்பிராயங்கள்வந்து சேர்ந்திருக்கின்றன:—

திருச்சினுப்பள்ளி—திருக்கோவிலூர் இருப்புப்பாதை, திருச்சினுப்பள்ளி-பன்ருட்டி இருப்பாதைகள் போட கவர்ன்மெண்டார் சாங்கிஷன் கொடுக்கும்பரியந்தம் தங்களுடைய ஜில்லாவில் இருப்புப்பாதை சம்பந்தமாக யாதொரு விதமான முயற்சியிலும் இறங்குகிறதில்லை என்று தீர்மானித்திருப்பதாக திருச்சினுப்பள்ளி ஜில்லா போர்டார் எழுதியிருக்கிறார்கள். $4\frac{1}{2}$ வட்டி டிபன்சர் கடன் வாங்கி ஜில்லாவின் இருப்புப்பாதைகளை கட்டுவது உத்தமமென்று தென் ஆற்காடு ஜில்லா போர்டார் அபிப்பிராயப்படுகின்றார்கள். சூரமங்கலம்—சேலம் இருப்புப்பாதையைப் போடுவதற்குத் தங்களிடமே ஐவேஜி யிருக்கிறதென்றும், அதைக்கொண்டு கட்டிமுடித்த பின்பு அதனால் வரும்பயனை அறிந்துகொண்டு அதன் பின்பு கடன் வாங்கலாமா அல்லது வேண்டாமா என்பது யோசனை செய்யப்படவேண்டுமென்றும் சேலம் ஜில்லா போர்டார் அபிப்பிராயப் படுகின்றார்கள். திருநல்வேலி திருச்சந்தூர் இருப்புப்பாதையைக் கட்ட ரூ. $20\frac{1}{2}$ லக்ஷம் பிடிக்குமென்றும், தங்கள்வசம் ரூ. $6\frac{1}{2}$ லக்ஷம் தானிருக்கிறதென்றும், தேவையான மீதத்திற்கு டிபன்சர் கடன் வாங்கலாமென்று திருநல்வேலி ஜில்லா போர்டார் அபிப்பிராயப்பட்டு எழுதியிருக்கிறார்கள். கோயமுத்தூர் ஜில்லா போர்டார் தங்கள்வசம் சேர்ந்திருக்கும் செஸ் பணத்தை வருஷத்திற்கு $3\frac{1}{2}$ வட்டிக்கி போட்டிருந்தும் $4\frac{1}{2}$ வட்டி மேனிக்கி டிபன்சர் கடன் வாங்க தங்களுக்குச் சந்தோஷமாயிருக்கிறதென்று எழுதியிருக்கிறார்கள். நெல்லூர் ஜில்லா போர்ட்ரார். இருப்புப்பாதைகள் போடப்பட்டு வரும்போது வட்டி, செஸ் பணத்திலிருந்து கொடுக்கப்படவேண்டுமென்ப தவசியமில்லை என்றும் சாத்தியமானவரையில் முதலிலிருந்தே வட்டி கொடுக்கப்பட்டு வரலாமென்று அபிப்பிராயப் படுகிறார்கள்.

குன்ட்டூர் ஜில்லா போர்டார் கடன்வாங்கவே சம்மதமில்லை என்று எழுதியிருக்கிறார்கள். இருப்புப்பாதைகளை போட்டுமுடிக்க எந்த உபாயம் சிலாக்கியமானது என்று கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்படுகிறார்களோ அப்படி செய்வதே தகுதிஎன்றுகர்நூல் போர்டார்எழுதியிருக்

கிறார்கள். கவர்ன்மெண்டார் சொல்லியிருக்கும் யோஜனையின்படி ஷை டிபன்சர் கடன்வாங்கி இருப்புப்பாதைகளை போட்டுமுடிப்பது உசிதமான காரியமாகவிருந்தபோதிலும் தங்களுக்கு புதிதாய் யாதொரு மூலதனமும் தேவையில்லை என்று தஞ்சாவூர் ஜில்லா போர்டார் எழுதியிருக்கிறார்கள். இராமநாதபுரம் ஜில்லா போர்டார் கடன் வாங்குவதற்கு தற்கலாம் அவசியம் ஏற்படவில்லை என்றும் கிருஷ்ணா ஜில்லா போர்டார் இனி போடப்போகிற இருப்புப்பாதைகளுக்கு தாங்கள் டிபன்ட்சர் கடன் வாங்கும் ஏற்பாட்டை ஒப்புக்கொள்ளுவதாகவும் எழுதியிருக்கிறார்கள். மதுரை ஜில்லா போர்டார் கவர்ன்மெண்டாருடைய யோஜனையை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். நெல்லூர் ஜில்லா போர்ட் பிரசிடெண்டு திவான் பகதூர் R. இராமசந்திரராவ், கடன் வாங்கப்படும் மூலதனம் ஜில்லா போர்ட் இருப்புப்பாதைகளில் போடப்படும் என்கிற நிபந்தனையில்லாமலே 4 வட்டிமேணிக்கி பொது ஜனங்களிடமிருந்து கடன் வாங்கலாமென்றும் இப்படி ஏறக்குறைய 25 லக்ஷம் சேகரித்திருப்பதாக எழுதியிருக்கின்றனர்.

இதேசமயத்தில், மதுரை ஜில்லாபோர்டு பிரசிடெண்டு டிரஸ்ட் பணம் (Trust Monies) ஜில்லா போர்ட் இருப்புப்பாதைகளில் போட்டு முடக்கப்பட சட்டம் இடம் கொடுக்குமா என்றும் அப்படி விடம் கொடுக்குமானால் இந்த ஜில்லாவிலேயே அனேக டிபன்சர் பங்குகள் எடுத்துக்கொள்ளப்படும் என்று எழுதியிருக்கின்றனர்.

இந்தியன் டிரஸ்ட் 20 (b) பிரிவின்படி சென்னப்பட்டணம் ஐக்கோர்ட்டாரால் செய்யப்பட்டு 1905-ம் வருஷத்திய சிவில் ரூல்ஸ் ஆப் பிராக்டிசில் (Civil Rules of Practice) சேர்க்கப்பட்டிருக்கும் விதியின்படி ஜில்லா போர்டார்களால் பிறப்பிக்கப்படும் ஜாமீன் ஆதரவுகளில் அதாவது டிபன்சர்களில் டிரஸ்ட் ஐவேஜியைப் போட்டு முடக்கலாம் என்று மதுரைஜில்லா போர்டாருக்கு கவர்ன்மெண்டார் எழுதியிருக்கிறார்கள். மேலேகண்ட அபிப்பிராயங்களை எல்லாம் பரிசிலனைசெய்து ஆலோசனைசெய்து ஒவ்வொரு ஜில்லாபோர்டு இருப்புப்பாதையும் போடப்படும்போது அதற்குத் தகுந்தபடி யோஜனைசெய்து மூலதனம் ஏற்பாடு செய்யப்பட வேண்டுமென்று கவர்ன்மெண்டார் தீர்மானித் திருக்கிறார்கள்.

—— (:o:) ——

A College of Commerce.

ஒரு வர்த்தக கலாசாலை.

——:(++):——

பம்பாயில் ஒரு வர்த்தகக் கலாசாலை ஸ்தாபிக்கப் படப்போகிறது, இந்தியா மந்திரியார் இதற்கு சம்மதம் கொடுத்திருக்கின்றனர். ரூ. 1125 சம்பளத்தில் ஒரு தலைமை போதகரும், மாதச்சம்பளம் ரூ. 875ல் இரண்டு உதவி போதகர்களும் ரூ. 300 முதல் ரூ. 500 ல் இரண்டு உபன்னியாசக் காரர்களும் நியமிக்கப்பட்டு இந்த கலாசாலையை நடத்தி வருவார்கள். பிரதம போதகரும் உதவி போதகர்களும் சீமையிலிருந்து தருவிக்கப்படுவார்கள். உபன்னியாசக்காரர்களுடைய உத்தியோகம் உரிமையுள்ள இந்தியர்களுக்கு கொடுக்கப்படும் அந்தக் கலாசாலை பம்பாய் சர்வ கலாசாலையுடன் சேர்க்கப்படும். கவர்ன்மெண்டாரும், கவர்ன்மெண்டாரல்லாதவர்களும், வர்த்தகக் கூட்டத்தார்களும் ஆக 13 மெம்பர்கள் சேர்ந்த ஒரு போர்டார் கலாசாலையை மானேஜ்மெண்டு செய்து வருவார்கள். லயிப் இன்சூரன்ஸ் கம்பெனிகள், பிராவிடென்ட் சொசயட்டிகள் முதலான நியமனங்களின் கணக்குகளை பரிசோதனை செய்யக்கூடிய யோக்கிதையுடைய ஆடிட்டர்கள் என்று சொல்லும்படியான கணக்கு பரிசோதகர்கள் முதலாயினோர் அந்தக் கலாசாலையில் தயார் செய்யப்படுவார்கள்.

ஷை கலாசாலையில் வர்த்தகத்திற்கும் கைத்தொழிலுக்கும் தேவையான படிப்பெல்லாம்

போதிக்கப்பட்டு வரும்பொருட்டு அத்தேவைகளை நன்குணர்ந்த அடியிற்கண்டவர்கள் கூடிய Advisory Board என்று சொல்லும்படியான யோஜனை சொல்லும் போர்டார் பம்பாய் கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் :—

1. வித்தை இலாக்காத் தலைவர், போர்டின் சேர்மன்.

2. பிரஸ்தாப கலாசாலையின் பிரதமபோதகர்.

3. ஷை இரண்டாவது போதகர்.

4. ஸர் ஜக்மோகன்தாஸ் வர்ஜீவன்தாசால் நியமிக்கப்பட்ட ஒரு பிரதிநிதி.

5. "வாடியா" தருமத்தின் டிரஸ்ட்டிகளால் நியமிக்கப்பட்ட ஒரு பிரதிநிதி.

6 ஸர் சின்னுபாய் மாதவலால் சி. ஐ. இ. அவர்களால் நியமிக்கப்பட்ட ஒரு பிரதிநிதி.

7 & 8 பம்பாய் சேம்பர் ஆப் காமர்ஸால் நியமிக்கப்பட்ட இரண்டு பிரதிநிதிகள்.

9. பம்பாய் ஆலை சுவான்தார் சங்கத்தினரால் நியமிக்கப்பட்ட ஒரு பிரதிநிதி.

10. இந்தியன் வர்த்தகச் சேம்பரால் நியமிக்கப்பட்ட ஒரு பிரதிநிதி.

11 பம்பாய், சீமை ஜவுளி சுதேச வர்த்தக சங்கத்தாரால் நியமிக்கப்பட்ட ஒரு பிரதிநிதி.

12. அகமடாபாத் ஆலை சங்கத்தாரால் நியமிக்கப்பட்ட ஒரு பிரதிநிதி.

13. பம்பாய் பாங்கின் பொக்கிஷதாரராகவும் காரிய நிர்வாகஸ்தராகவுமிருக்கும் சர் ஜேம்ஸ் பெக்பி.

—:‡:—

A Commercial College for Madras
சென்னைக்கு ஒரு வர்த்தக கலாசாலை.

—:(*):—

திருச்சிறுப்பள்ளியில் நடந்த மேமீ கூடிய சென்னை மாகாணக் கூட்டத்தில் அடியில் கண்ட தீர்மானம் செய்யப்பட்டது :—

"வியாபார சம்பந்தமாகவும் கைத்தொழில் சம்பந்தமாகவும் மாணாக்கர்களுக்கு உயர்தர படிப்பை போதித்துவரும்படி சென்னையில் தகுந்த சிப்பந்திகளும் தளவாடங்களும் பொருந்தப்பெற்ற கலாசாலை ஒன்று ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்று இந்தக் கூட்டம் கவர்ன்மெண்டாரை வேண்டிக் கொள்ளுகின்றது."

இப்பேர்ப்பட்ட கலாசாலைகள் சென்னையில் சூனியமாயிருப்பதை முன்னிட்டு இந்தியர்கள் கைத்தொழில் விஷயமாகவும் வர்த்தக விஷயமாகவும் அவைகளுக்குரிய பிரத்தியேகமான அறிவை அடைய வசதியற்றவர்களாக யிருக்கிறார்கள் என்றும், ஆதலால் அவர்கள் ஆரம்பித்த வர்த்தகக் கைத்தொழில் முயற்சிகள் தலைதூக்காமல் சோர் வடைகின்றன வென்றும் சென்னையிலிருந்து வந்திருந்த மிஸ்டர் வி. மாசிலாமணிப் பிள்ளை பேசிப் பிரேரபணை செய்தனர். இதன்பேரில் மாயவரமிருந்து வந்த மிஸ்டர் கே. சேஷய்யர் அங்கீகரித்துப் பேசத் தீர்மானம் கூட்டத்தாரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சென்னை வியாபாரி.

நாளது ஜூலை மாஸம் முதல் **சென்னை வியாபாரி** யானது மாதம் ஒருமுறையாகப் பிரசுரிக்கப்படும் ; பிரதி சஞ்சிகையிலும் நாற்பது பக்கங்களுக்குக் குறையாமல் விஷயங்கள் அடங்கியிருப்பதோடு, கூட்டுறவு, கைத்தொழில் விவசாயம் ஆகிய இவ்விஷயங்களையும் குறித்து வியாசங்கள் தகுந்த கல்வியாளரால் எழுதப்படும்.

British Indian Trade.

பிரிடிஷ் இந்தியாவின் வர்த்தகம்.

—(*:)—

1885, 1912 ஆகிய இந்த வருடங்களில் பிரடிஷ் இந்தியா, யுனைட்டட் கிங்டம், பாக்கி பிரிடிஷ் சமஸ்தானம், அன்னிய தேசங்கள் ஆகிய இந்த விடங்களிலிருந்து இறக்குமதி செய்வதற்கும் இந்த விடங்களுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் 100-க்கு இவ்வளவென்று கணக்கு சொல்ல முடியுமாவென்று மிஸ்டர் பேஜ் என்பவர் வர்த்தக போர்டாரின் பிரசிடெண்டை ஒரு கேள்வி கேட்டார். மிஸ்டர் பக்ஸ்டன் சொன்னபதில் :—1886 மார்ச்சுமீ 31௳ யோடு முடியும் வருடத்தில் பிரிடிஷ் இந்தியா சமுத்திர மூலியமாய் செய்த இறக்குமதியின் மொத்தத்தில் 100-க்கு 82 யுனைட்டெட் கிங்டத்திலிருந்தும், பிரிடிஷ் சமஸ்தானத்தின் மற்ற பாகங்களிலிருந்து 100-க்கு 10-ம், அன்னிய தேசங்களிலிருந்து 100-க்கு 8-ம் இறக்குமதி செய்திருக்கிறது. 1912 மார்ச்சுமீ 31௳யுடன் முடிவாகும் வருடத்தில் இறக்குமதி யுனைட்டெட் கிங்டம் 100-க்கு 64, பிரிடிஷ் சமஸ்தான மற்றபாகங்கள் 100-க்கு 6, அன்னிய தேசங்கள் 100-க்கு 30; சமுத்திர மூலியமாக நடந்த ஏற்றுமதியில் 1886ல் 100-க்கு 41, யுனைட்டெட் கிங்டத்திற்கும், பிரிடிஷ் சமஸ்தானத்தின் மற்ற பாகங்களுக்கு 100-க்கு 22ம் அன்னிய தேசங்களுக்கு 100-க்கு 37ம் ஏற்றுமதி செய்திருக்கிறது. 1912ல் யுனைட்டெட் கிங்டத்திற்கு 100-க்கு 26, சமஸ்தானத்தின் மற்ற பாகங்களுக்கு 100-க்கு 16, அன்னியதேசங்களுக்கு 100-க்கு 58ம் அனுப்பியிருக்கிறது,

—:(*):—

Indian Imports and Exports.

இந்தியாவின் இறக்குமதிகளும் ஏற்றுமதிகளும்.

1890, 1900, 1910, 1911 ஆகிய இந்த வருஷங்களில் உலகத்திலுள்ள முக்கிய தேசங்களுக்கு இந்தியா ஏற்றுமதி செய்திருக்கும் சரக்குகளில் மொத்த கிரைய மதிப்பையும் அத்தேசங்களிலிருந்து இறக்குமதி செய்த சரக்குகளின் மொத்தக் கிரைய மதிப்பையும் சொல்ல இஷ்டப்படுவாரா என்று மிஸ்டர் மாக்கா என்கிற பார்லிமெண்டு மெம்பர் இந்தியா உதவி காரியதரிசியாரைக் கேட்டனர்.

மிஸ்டர் மாண்டேக் சோன்னபதில்:—கேள்வியில் காணப்பட்ட கலண்டர் வருஷங்களுக்கு (கலண்டர் வருஷம் என்றால் ஜனவரி மீ முதல் டிசம்பர் மீ உள்பட) கணக்கு அகப்படவில்லை ஆயினும் அதேவருஷங்களுக்குச் சரியான அபிஷியல் வருஷங்களுக்கு (அபிஷியல் வருஷம் என்றால் ஏப்பிரல் மீ ஆரம்பமாக மார்ச்சு மீ கூடிய ஒருவருடம்) கணக்கு சொல்ல சந்தோஷமாயிருக்கிறேன். தேவையாயிருந்தால் ஆனரபில் மெம்பர் அதற்கு கேள்விபோட வேண்டும்.

Proceedings of the Chambers.

சேம்பர்களுடைய நடவடிக்கைகள்.

தென்னிந்தியாச் சேம்பர்

1913 ௵ ஏப்ரல் மீ 18௳ கூடிய மீட்டிங் நடவடிக்கைகளில் நடந்த முக்கிய விஷயங்கள்:— மெஸர்ஸ் மவுலானா அப்தல் சுப்ஹான், மெசர்ஸ் P. N. முத்துசாமி நாயுடு அவர்களும். சங்கத்திற்கு கவுரவ காரியதரிசிகளாக நியமிக்கப்பட்டார்கள்.

மிஸ்டர் S. V. ஹனுமந்தராவ் கடந்த மூன்று வருஷங்களாக கௌரவ காரியதரிசியாக யிருந்து சேம்பர் சிலாகிக்கும்படியான உபயோகமுள்ள வேலைகள் செய்ததற்காக வந்தனமளிக்கவேண்டுமென்று கமிட்டியார் தீர்மானித்தார்கள்.

துறைமுகத்தில் வெடி மருந்து கிடங்கு.

துறைமுகத்திலிருக்கும் தீப்பிடிக்காத கொட்டகையில்இனி வெடிமருந்துகள் அல்லது பாணங்கள் சேர்த்து வைக்கக்கூடாதென்று கவர்ன்மெண்டார் விளம்பரம் பிரசுரித்திருக்கிறார்கள் என்றும், வெடி மருந்து கிடங்கு பிரத்தியேகமாக ஒன்று கட்டப்படும் வரையில் பிரஸ்தாப கொட்டகையையே உபயோகப்படுத்திவரும் படி போர்ட்டிரஸ்டிகள் உத்திரவு செய்தால் நன்றாயிருக்குமென்றும் பாணங்கள் இறக்குமதி செய்பவர்கள் சேம்பருக்குத்தெரிவித்துக் கொண்டார்கள். கவர்ண்மெண்டார் வெடிமருந்து பிரதம இன்ஸ்பெக்டருடைய ஆலோஜனையின்பேரில் துறைமுகத்திற்குள்ளே ஒரு வெடிமருந்து கிடங்கு கட்டுவதாக உத்தேசித்திருக்கிறார்கள் என்றும், நிலம்பார்த்து நிச்சயித்துவிட்டார்கள் என்றும் கவர்ன்மெண்டார் ஷை கட்டடத்திற்காக ரூபாய் பதினாயிரம் கொடுத்து உதவியிருக்கிறார்கள் என்றும் கட்டடம்கட்டி முடிவதற்கு மொத்தத்தில் ரூபாய் 40 ஆயிரமாகுமென்றும் போர்டிரஸ்ட் சேர்மன்மூலியமா சேம்பர் கேள்விப்பட்டது. இந்த கட்டடம் கட்டி முடிவதற்குள் வியாபாரிகள் ஷைதீப்பிடிக்காத கொட்டகையை உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டுமானால் கவர்ன் மெண்டாருக்கு எழுதிக் கொள்ள வேண்டு மென்று சேர்மன் எழுதியிருந்தார். அதேபிரகாரம் கவர்ன்மெண்டாருக்கு அறிவிக்கப்பட்டு வர்த்தகருடைய கோரிக்கையைக் கவர்ன்மெண்டார் நிறைவேற்றிவைக்கவேண்டுமென்று வேண்டிக் கொள்ளப்பட்டிருக்கிறது.

பீச் ரயில்வே ஸ்டேஷன்.

பீச் ரயில்வே ஸ்டேஷனில் கடந்த மார்சு௴ அந்தத்திலும் ஏப்பிரல் ௴ ஆரம்பத்திலும் காலி வாக்கின் வண்டிகள் ரெயில்வே கம்பெனிகாரர்கள் போதுமானபடி சப்ளை செய்யாமல் வர்த்தகர்களுக்கு கனத்த அசௌகரியமும் நஷ்டமும் நேரிட்டதென்று சில முக்கிய வர்த்தர்கள் அறிவித்துக்கொண்டார்கள். சேம்பர் இதுவிஷயமாக, ஆழ்ந்து விசாரணைசெய்து போதுமானபடி வண்டிகளில்லை யென்று அறிந்து சாமான்களை தவக்கவைக்காமல் உடனுக்குடனே ஏற்றி அனுப்பவேண்டுமானால் தினம் ஒன்றுக்கு 70 வாகின்கள் சப்ளை செய்யப்படவேண்டு மென்று பீச்சு ஸ்டேஷனில் வர்த்தக சாமான் போக்கு வரத்து விசேஷித்துக்கொண்டு வருகிறபடியால் 70 வாகின்கள் கேட்டிருப்பதே மிகவும் சொற்பமென்றும் ரெயில்வே அதிகாரிகள் இந்தக் குறையை நீக்கிவைக்கவேண்டு மென்றும் சேம்பர் ரெயில்வே அதிகாரிகளை வேண்டிக் கொண்டிருக்கிறது.

மதிராஸ் மங்களூர் டிரெயின்.

மதிராசிலிருந்து மங்களூருக்குப் போக்குவரத்தாகும் ரயில்வண்டி ஏற்பாடு தபால் விஷயத்திலும் சரியே அல்லது பிரயாண விஷயத்திலும் சரியே ஜனங்களுக்கு சவுகரியமாக விருக்கிறதா வென்றும், அப்படி சௌகரியமாகயில்லாவிட்டால் சௌகரியமாக விருப்பதற்கு என்ன மாறுதலான ஏற்பாடு செய்யலா மென்று கவர்ன்மெண்டார் சேம்பருக்கு எழுதி கேட்டிருந்தார்கள். சென்னையிலிருந்து மங்களூருக்குப் போகும்வண்டி சாயங்காலம் 6 மணிக்குள்ளாக போய்விட வேண்டுமென்றும் மங்களூரிலிருந்து சென்னைக்குவரும் வண்டி காலை 7 மணிக்குள்ளாக புறப்படவேண்டுமென்றும், தபால்சம்பந்தப்பட்ட வரையில் மெயில்வண்டி வந்தவுடன் தபால்கள் பட்வாடா செய்யப்பட வேண்டுமென்றும் அடுத்தநாள் மெயில் டிரெயினில்

லெட்டர் அனுப்பும் பொருட்டு முந்திய இரவு 11 மணி வரையில் தபால் ஆபீசில் லெட்டர்கள் பெற்றுக் கொள்ளப்படவேண்டும். இம்மாதிரியான மாறுதல்கள் செய்தால் ஜனங்களுக்கு சௌகரியமாக விருக்குமென்று சேம்பர் பதில் எழுதியிருக்கின்றது.

நிர்வாகக் கமிட்டியார் 1913 மேமீ 7௳ புதன்கிழமை கூட்டம் கூடி நடத்திய நடவடிக்கைகளின் சாராம்சம்:—

இந்திய நாணயக் கமிஷன்.

இந்திய நாணய சம்பந்தமாக விசாரணை செய்ய மாக்ஷிமை தங்கிய மகாராஜா அவர்களுடைய உத்திரவின்பேரில் ஒரு கமிஷன் ஏற்படுத்தப்பட்டதல்லவா அந்தக் கமிஷன் இந்தியாவிற்கு வந்து விசாரணை செய்யப்போகிறதா அல்லது இங்கிலாண்டிலிருந்தபடியேவிசாரணை நடத்தப் போகிறதாவென்றும் அப்படி ஒரு கால் இந்தியாவிற்கு வருகிற உத்தேசமில்லாவிட்டால் அந்த கமிஷனுக்கு அனுப்பப் படவேண்டிய அபிப்பிராயங்கள் எந்தத் தேதிக்குள் அனுப்பப்பட வேண்டுமென்றும், இந்தியாவில் தங்க நாணய மடிக்கும் பிரஸ்னையைப் பற்றிக்கூட அந்த கமிஷன் விசாரணை செய்யப் போகிறதாவென்றும் இது சம்பந்தமான பிரசுரங்கள் தங்களுக்கு அனுப்பப்பட வேண்டுமென்று கவர்ன்மெண்டாருக்கு எழுதிக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

இது விஷயமாக சம்பூரணமாய் ஆராயவும், செய்த முடிவுகளை சேம்பருடைய ஆலோசனைக்குக் கொண்டுவரும்பொருட்டும் ஒரு சப் கமிட்டி ஏற்படுத்தப்பட்டது.

மதிராஸ் தென்மராட்டா இருப்புப்பாதைகளின் வேலைக்காரர்களின் கட்டுப்பாட்டைக் குறித்து சென்னைச் சேம்பர் ஆப் காமர்ஸ் இந்தியா கவர்ன்மெண்டாருக்கு எழுதியிருக்கும் கடிதத்தின் நகல் ஒன்று பிரஸ்தாபச் சேம்பருக்கு அனுப்பப்பட்டது.

பொது ஜனங்களுக்கும் அவர்களுள் முக்கியமாய் வர்த்தக வகுப்பார்களுக்கு இந்தக் கட்டுப்பாடுகளால் உண்டாகும் கஷ்ட நஷ்ட அசௌகரியங்களைக் குறித்து எழுதி சென்னை கவர்ன்மெண்டார் மூலியமாக இந்தியா கவர்ன்மெண்டாருடைய கவனத்தை இழுக்கவேண்டுமென்றும், அவர்கள் அதிதீவிரத்தில் இது விஷயமாய் கவனித்து கெடுதல்களை அடக்கும்படியான உபாயங்களைச் செய்யும்படியாக வேண்டிக்கொள்ள வேணுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

சென்னை கிடங்குத் தெருவிற்கு மின்சாரத் தீபம் போடவேண்டுமென்றும் ஜலம் தெளிக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் ஷை தெருவிலுள்ள வர்த்தகர்கள் முனிசிபாலிட்டிக்கு அனுப்பிய மகஜரின் நகல் ஒன்று அனுப்பப்பட்டு சேம்பருடைய ஆலோசனைக்கும் ஆதரிப்பிற்கும் வந்து சேர்ந்தது.

வியாபாரத்தின் முக்கியத்தை உத்தேசித்து வியாபாரிகளின் கோரிக்கையை ஆதரிக்க வேணுமென்று தீர்மானிக்கப்பட்டது.

இந்த தீர்மானத்தின் நகல் ஒன்று கார்பொரேஷனுடைய பிரசிடெண்டிற்கும் கமிஷனர்களுக்கும் அனுப்பப்பட்டது.

சென்னைச் சேம்பர்.

1913 ஏப்பிரல்மீ 29௳ கூடி நடத்திய நடவடிக்கைகளின் சங்கிரகம்:—

இந்தியன் நாணய கமிஷன்.

இந்த கமிஷன் முன்னில் சாக்ஷியம் சொல்ல விரும்புகிறவர்களுடைய பெயர்களை தங்களுக்கு அறிவிக்கும்படி கவர்ன்மெண்டாரிடமிருந்து வந்த கடிதத்திற்கு, இந்தச் சேம்பரில்

மெம்பராயிருக்கும் மிஸ்டர் W. B. ஹன்டர் சாக்ஷியம் சொல்ல தம்முடைய சம்மதத்தை அறிவித்திருக்கிறார் என்றும் வேறெவரும் இதுவரையில் முன்வரவில்லை என்றும் இந்தியா முழுமைக்கும் ஒரு சர்க்கார் பாங்க் ஏற்பட போகிற பிரஸ்னையைப்பற்றி கூட இந்த கமிஷன் விசாரணை செய்யப்போகிறதா என்று தான் அறிந்துகொள்ள ஆவலாயிருப்பதாய் பதில் எழுத வேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டது.

பர்மா சேம்பர்.

நெல், அரிசி முதலிய தானியங்களை அளக்க ஆலைக்காரர்கள் $8\frac{1}{2}$ முதல் 9 காலன் பிடிக்கும் படியான "பர்மா கூடையை" ஒரு பொதுவான அளவாக உபயோகப் படுத்திக்கொண்டு வருகிறார்கள். இந்த அளவு எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டால் உத்தமமாக விருக்குமென்று மாண்டிலே விவசாய டைரக்ட்டருக்கு இந்தச் சேம்பர் பதில் எழுதியிருக்கின்றது.

மான்டிலே விவசாய டைரக்ட்டர் ஒரு மூட்டை ஆமணக்கு அனுப்பி அதன் விலையையும் கொட்டையைப்பற்றிய அபிப்பிராயத்தையும் அறிவிக்கும்படி எழுதியிருந்ததற்கு மதிப்பு போட கொட்டை லண்டனுக்கு அனுப்பப்பட்டிருக்கிற தென்றும் தற்கால ரங்கூன் விலை **55** ராத்தல் கொண்ட 100 மூட்டைகளுக்கு ரூ. 275 என்றும் இச்சேம்பர் பதில் எழுதியிருக்கின்றது.

இந்தியாவில் இறக்குமதி செய்யப்படும் (Condensed milk) என்கிற பால் பெட்டியின் பாலில் 100-க்கு 3 கொழுப்பு குறைவாயிருந்தால் அப்பெட்டியின்பேரில் "Prepared from Skimmed Milk" அதாவது கடைந்த பாலிலிருந்து தயார் செய்யப்பட்டதென்று" அச்சிடப்பட்டிருக்க வேண்டுமென்று பர்மா வீகஸ்டம் இலாக்கா காரர்கள் விளம்பரித்திருக்கிறார்கள்.

———:(✱):———

London Chamber of Commerce.
லண்டன் சேம்பர் ஆப் காமர்ஸ்.

லண்டன் வர்த்தக ஆலோசனை சபையில் 5068 மெம்பர்களிருக்கிறார்கள். சென்ற வருடத்தில் 3600 பேர்கள் தானிருந்தார்கள். பற்பல வகைகளிலிருந்து சேம்பரின் வருமானம் சென்ற வருடம் 50 ஆயிரம் பவுன்; கடந்த வருஷம் இந்தியா சம்பந்தமான வியாபாரங்களை மட்டிலும் கவனிக்க சேம்பருக்குள்ளவே ஒரு பிரிவு ஏற்படுத்தப்பட்டது. சீனு, ஜப்பான் ஆப்கானிஸ்டான், பெர்ஷியா முதலான தேசங்களுடைய வியாபாரங்களை கவனிக்க வேறொரு பிரிவு ஏற்படுத்தப்பட்டது. சேம்பரின் பிரசிடெண்டு, வைஸ் பிரசிடெண்டு, செக்ரேட்டரி போலொத்த காரிய நிர்வாகஸ்தர்கள் மூன்று வருஷம் தான் அவ்வுத்தியோகங்களிலிருக்க வேணுமாம். இப்போது பிரசிடெண்டாக விருந்து நீங்கியவர் செக்ரேட்டரியாக விருந்து வரும் மிஸ்டர் மஸ்கிரேட் என்பவரைப்பற்றி வெகு புகழ்ந்து பேசினார். மகா சாமர்த்தியசாலி என்றும், புத்தி நுட்பமுடையவரென்றும், பிரதி தினமும் நேரிடும் அனேக சிக்கலான பிரஸ்னைகளை சிக்கறுக்க வல்லமை யுடையவரென்றும் பேசினார்.

சென்னப்பட்டணம் ஐக்கோர்ட்.

கோடைகால ரஜாவிற்காக மூடப்பட்டிருந்த ஐக்கோர்ட் இம்மாதம் 12-ந்தேதி திங்கட்கிழமை திறக்கப்படும். பென்ஷன் பெற்றுக்கொண்டு சீமைக்குப் போய்விட்ட மிஸ்டர் ஜஸ்டிஸ் பென்ஸனுக்குப் பதிலாக மிஸ்டர் ஜஸ்டிஸ் ஓல்ட்பீல்ட் நியமனம் பெற்றிருக்கிறார்.

———:(++):———

Interpellations in the Legislative Council.

சட்டஸபைக் கேள்விகளும் ஜவாப்புகளும்.

——(:o:)——

1913-ம் ஹு ஜூன் ௴ 11௳ வெள்ளிக்கிழமை.

ஆனரேபில் மிஸ்டர் வி. கிருஷ்ணராவ்:—

கே. (a) மதிராஸ் நிலச்சொத்து ஆக்ட் சீர் திருத்தப் படுவதற்கு முந்தி ஷை ஆக்ட் ஊர்ச்சிதத்திற்கு கொண்டுவரப் பட்டதில் உள்ள அனுபோக சம்பந்தமாக முக்கியமான ஜமீன் தார்களிடமிருந்து ரிப்போர்ட் வர வழைக்க கவர்ன்மெண்டார் இணங்கு வருவார்களா?

ஜ. (a) 1908ம் வருத்திய சென்னை நிலச் சொத்து ஆக்ட் சம்பந்தமாக அனேக ஜமீன் தார்களும், நிலச்சுவான்தார்களும், மதிராஸ் நில சுவான்தார் சங்கத்தார்களும் பலதடவை அடிக்கடியும் தனித்தனியேயும் தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். ஷை ஆக்டினால் உண்டாயிருக்கும் பலாபலனை கவர்ன்மெண்டாருக்குத் தெறிவித்துக்கொள்ள ஒவ்வொரு நிலச் சுவான்தாரும் பாத்தியமுடையவர். ஆகையால் ஆனரபில் மெம்பர் யோஜனை சொன்ன படி யாதொரு ரிபோர்ட்டும் பிரத்தியேகமாக தருவிக்கவேண்டிய தவசியமில்லை என்று கவர்ன்மெண்டார் அபிப்பிராயப் படுகிறார்கள்.

கே. (b) கஞ்சம், கோதாவரி, விசாகப்பட்டணம் ஏஜன்சி பிராந்தியங்களில் ரப்பர் சாகுபடிக்கி லாயக்குள்ள ஏதேஷ்டமான தரிசு நிலங்களிருப்பது வாஸ்தவந்தானா?

(b) அப்படியானால், அப்பேர்பட்ட சாகுபடியை ஆதரிக்க கவர்ன்மெண்டார் இஷ்டப் படுவார்களா? அப்பேர்பட்ட காலி நிலங்கள் சாஸ்வத செட்டில்மெண்டுடைய எஸ்டேட்டுகளிலிருந்தால், அப்பேர்பட்ட ஜமீன்தார்கள் ஐரோப்பிய முதலாளிகளுக்கும் இன்னும் மற்ற முதலாளிகளுக்கும் நீண்ட காலத்திற்கு ஷை நிலங்களை ரப்பர் சாகுபடிக்கு குத்தகை விட்டு வரும்படியாக கவர்ன்மெண்டார் தக்க ஏற்பாடுகள் செய்து ஜமீன்தார்களை ஆதரிக்க கவர்ன்மெண்டார் இஷ்டப்படுவார்களா?

ஜ. (b) கவர்ன்மெண்டார் இது சம்பந்தமாக யாதொன்றும் கேள்விப்படவில்லை.

ஆனரபில் மிஸ்டர் கே. ருமய்யங்கார்:—
(கே) மதுரை ரயில்வேஸ்டேஷனில் மேன்பாலமும், பிளாட்பாரம் மேடையும் மூடப்படாம லிருப்பதால் அவைகளில் நடமாடும் ஜனங்கள் வெயிலுக்கும் மழைக்கும் இலக்காகி கனத்த கஷ்டப்பட்டு வருகிறார்கள் என்பதும், இது விஷயம் ரயில்வே அதிகாரிகளுக்கு பலமுறை அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அவர்கள் கவனிக்கிறதில்லை என்பதும் உண்மைதானா?

பிளாட்பாரம் மேடையையும், பாலத்தையும் கூடிய சிக்கிரம் ரெயில்வே அதிகாரிகள் மூடுவார்களா? ஒரு கர்ப்பஸ்திரீ அப்பாலத்தின் மீது நடு வெய்யிலில் நடந்துபோனதால் மயக்கம் கொண்டு கீழேவிழுந்தது வாஸ்தவந்தானா?

ஜ: கர்பஸ்திரீ சம்பவத்தை கவர்ன்மெண்டார் கேள்விப்படவில்லை. மதுரை ஸ்டேஷன் அதிசிக்கிரத்தில் புதிப்பிக்கபடப் போகிறதாகவும் அப்போது பாலமும் பிளாட்பாரமும் மூடப்படுமென்பதாக கவர்ன்மெண்டார் சில காலத்திற்கு முந்தி கேள்விப்பட்டார்கள். ரெயில்வே கம்பெனியாரைக் கட்டாயப்படுத்த கவர்ன்மெண்டாருக்கு அதிகாரமில்லை. ஆயினும் ஆனரபில் மெம்பர் கேட்டக் கேள்வி கம்பெனியார்களுடைய பார்வைக்கு அனுப்பப்படும்.

ஆனரபில் மிஸ்டர் கேசவப்பிள்ளை:—கே. மலேஸ்டேடினும் பீஜீ தீவிலும் இருக்கும் அன்னிய தேசக் கூலிக்காரர்களுக்குள் எத்தனை பேர்கள் சென்னை மாகாணத்தைச் சேர்ந்தவர்கள்?

இவர்களுடைய தேக ஸ்திதி எப்படியிருக்கிறது; இவர்களுடைய தேகம் திடமாயிருக்கும் பொருட்டும், இவர்களுடைய குழந்தைகள் படிக்கும் பொருட்டு பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கவும் கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்வார்களா? இது விஷயமாக லண்டனில் பிரசுரமாகும் "இந்தியா" பத்திரிகையில் சமீபத்தில் எழுதப்பட்டிருந்த வியாசத்தை கவர்ன்மெண்டார் வாசித்தும் பார்த்தார்களா?

ஜ.—வியாசம் கவர்ன்மெண்டாருடைய கவனத்திற்கு எட்டவில்லை. அவர்கள் தேக சௌக்கிய சம்பந்தமாகவாவது அல்லது படிப்பு விஷயமாகவாவது யாதொரு ஏற்பாடும் செய்யப்படவில்லை.

ஆனரபில் மிஸ்டர் K. V. ரமானுஜாச்சாரியார்:—வீட்டு வாடகையும், பிரதான நகராகிய மதிராசில் வசிப்பதற்காக அலவன்சும் தங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்றும் கவர்ன்மெண்டு ஆபீசுகளில் உத்தியோகம் பார்க்கும் கிளர்க்குகள் கவர்ன்மெண்டாருக்கு மகசர் அனுப்பியிருக்கிறார்களா? அது அநுகூலமாக கவனிக்கப்படுமா?

ஜ:—வந்திருக்கிறது. அனுகூலமாக கவனிக்கப்படும்.

ஆனரபில் மிஸ்டர் அகமத்தம்பி மரக்காயர்:—கே நாகப்பட்டணம் துறைமுகத்தில் மண் எடுப்பதற்காக அனுப்பப்பட்ட யந்திரம், கல்கத்தாவிலிருந்து வந்தபோது யாதொரு பாதுகாப்பின்றி சமுத்திரத்திலேயே விழுந்துகிடக்கிறதென்கிற சமாசாரம் கவர்ன்மெண்டாருக்குத் தெரியுமா? அப்படியானால் கரையோரத்தில் மண் அடராமலிருப்பதற்கு கவர்ன்மெண்டார் தற்போதைய ஏற்பாடுகள் செய்வார்களா?

ஜ:—சமாசாரம் தெறியும்; மண்ணெடுக்கும் புதிய யந்திரம் ஒன்று சமீபத்தில் நாகப்பட்டணம் துறைமுகத்திற்கு அனுப்பும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இப்போ திருக்கும் "ஹாவிலாக்" என்கிற யந்திரம் உபயோகமுள்ள வேலைசெய்து வருகிறபடியால், தற்போதைய ஏற்பாடு யாதொன்றும் செய்யப்பட வேண்டிய தவசியமில்லை என்று கவர்ன்மெண்டார் அபிப்பிராயப் படுகிறார்கள்.

கே: பிடரேட்டட் மலேஸ்டேட்டுகள், ஸ்டெரேயிட் செட்டில் மெண்டுகள்—ஆகிய இந்த இரண்டு தேசங்களிலிருந்து வரும் பிரயாணிகள் கொண்டுவரும் உடுப்பு-சாமான் மூட்டைகள் மீதுகூட. சென்னையிலும் வெளியூர் துறைமுகங்களிலும் தீர்வை அதிகாரிகள் தீர்வை போட்டு வருகிறார்களென்று கவர்ன்மெண்டாருக்குத் தெரியுமா? இப்படி தீர்வை போடக்கூடாதென்றும் "உடுப்பு-சாப்பாடு மூட்டை" என்றால் என்னவென்றும் கவர்ன்மெண்டார் தாத்பரியம் கூற இஷ்டப்படுவார்களா?

ஜ: ஸ்டிரேயிட் செட்டில்மெண்டு, பிடரேட்டட் மலேஸ்டேட் ஆகிய இந்த இரண்டு யிடங்களிலிருந்து வரும் பிரயாணிகள் கொண்டு வரும் சாப்பாட்டு மூட்டைகள் உடுப்பு மூட்டைகள் மீது தீர்வை போடக்கூடாது. என்ன என்ன மூட்டைகள்மீது தீர்வை போடக்கூடாதென்று 1904 ஆகஸ்ட்மீ 21உ போர்ட் சென் ஜியாஜ் கெஜட்டில் பிரசுரஞ் செய்யப்பட்டிருக்கிறது. இந்த விதியை தீர்வை அதிகாரிகள் புறக்கணிக்கிறார்கள் என்று எண்ணுவதற்கு கவர்ன்மெண்டாருக்கு யாதொரு காரணமுமில்லை.

ஜமாபந்தி.

கனம் ராவ்பகதூர் வி. கே. ராமானுஜாசாரியாரவர்கள், இப்போது வருஷத்திற்கொருமுறை நடைபெறும் ஜமாபந்தியைக் கிராம ஆபீஸர்களுக்கும் குடிகளுக்கும் யாதொரு அசௌகர்யத்தையும் உண்டுபண்ணக்கூடாதபடி சுருக்கிப்போட வேண்டுமென்று பிரேரேபித்திருக்கிறார்.

Trade Notes.
வியாபாரக் குறிப்புகள்.

ஆகாயகப்பல் மூலியமாக இந்தியாவுக்கு.

அடுத்த அக்டோபர் மாதத்தில் G. M. டையாட் என்பவர் இங்கிலாண்டிலிருந்து இந்தியாவிற்குப் பறந்துவரப் போகின்றனர். இதற்காகவே இங்கிலாண்டில் ஆகாயத்தில் பறக்கும் ஒரு யந்திரம் கட்டப்பட்டு வருகின்றது. கப்பல் வரும் மார்க்கம்:—இங்கிலாண்டிலிருந்து பிரான்சு மூலியமாக மார்ஷேயில்ஸ், மார்ஷேயிரலிருந்து சிசிலிக்கு சிசிலியிலிருந்து வட அமெரிக்காவிற்கு தாண்டுகின்றது. இதன் பிறகு அலகசாண்டரியா கரைவழியாகவந்து, கேப்ரோவுக்கும் கார்ட்டூமுக்கும் வந்து சேருகிறது. பிறகு ஏடனுக்கு தாண்டுகின்றது. ஏடனிலிருந்து கராச்சியில் வந்திறங்குகின்றது. கப்பல்வரும் மார்க்கங்கள் பெரும்பாலும் பிரிடிஷ் ராஜ்ஜியங்களாக விருக்கும். தங்கும் மார்க்கங்களில் படகுகள் தயாராகவிருக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. இந்தப் பிரயத்தனத்திற்காக இங்கிலாண்டில் ஆயிரம் பவுன் நன்கொடைப் பணம் சேர்ந்திருக்கிறது. இந்தியாவிலிருந்தும் உதவி எதிர்பார்க்கப்படுகின்றது.

அக்கவுன்டன்ட் ஜேனரல்கள்.

இந்தியன் பயினான்ஸ் கமிட்டியின் சம்பந்தமாக, இந்தியாவிலிருக்கும் அக்கவுன்டன்ட் ஜெனரல்கள் சமீபகாலத்தில் கல்கத்தாவில் ஒரு கூட்டம் கூடி யோஜனை செய்வார்கள்.

ஒரு விளம்பரம்.

இந்தியாவிற்கும் பர்மாவிற்கும் ஒரு புரம், ஐரோப்பாவில் சில தேசங்கள் மற்றொரு புரம் இவைகளுக்குப் பத்திரிகை சமாசாரங்களை தந்தி மூலியமாக அனுப்ப கடந்த அக்டோபர் மாதத்தில் சார்ஜ் குறைக்கப்பட்டது. இவ்வகைத் தந்திகளுக்கு "deferred foreign Press Telegrams" என்பது பெயர்; இப்படி குறைந்த சார்ஜில்லாமல் போகிற பத்திரிகை தந்திகளுமுண்டு. குறைந்த சாஜகளுக்கு அனுப்பப்படும் தாமதத் தந்திகளை தந்தி ஆபிசில் மற்ற தந்திகள் அனுப்பப்பட்ட பிறகு தாமதமாய் அனுப்பும்படி ஏற்பாடு செய்திருந்தார்கள். இப்போது அவைகளை மற்ற தந்திகள் போலவே அனுப்பும்படி இந்தியா கவர்ன்மெண்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

உலகத்தில் மகா உயர்ந்த கட்டடம்.

நியூயார்க் என்கிற பட்டணத்தில் "வுல்ஸ் வொர்த் பில்டிங்" என்று பெயர்கொண்ட கட்டடம் கட்டப்பட்டு சென்ற மாதம் 24-ந் தேதி வியாழக்கிழமை திறக்கப்பட்டது. இது உலகத்தில் மற்ற கட்டடங்களைப் பார்க்கிலும் உயரத்தில் சிறந்தது. 56 மெத்தைகளிருக்கின்றன. உச்சியிலிருக்கும் 56-வது மெத்தையை கவிராயர்கள், சித்திரை வேலைக்காரர்கள், நூதனம் கண்டு பிடிப்பவர்கள், விளம்பர ஏஜண்டுகள் முதலாயினோர் வாடகைக்குக் கேட்டார்கள். கொடுக்கப் படவில்லை. தேத் தண்ணீர் சாப்பாடும் உல்லாச அறைக்காக வைத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது. கோபுரம் அடி தளத்திலிருந்து 780 அடி உயரமுள்ள இக்கட்டடம் 206,000,00 ராத்தல் பளுவுடையது.

கோவேறு கழுதை.

அர்ஜண்டயினுக்குச் சென்று கோவேறு கழுதைகள் வாங்கி ஒரு பிரத்தியேகமான படகில் ஏற்றிக் கல்கத்தாவுக்குக் கொண்டுவரும்படி கவர்ன்மெண்டார் மேஜர்க்ஷோர் என்பவருக்கு உத்திரவு செய்திருந்தார்கள்; அப்படியே மேஜர்க்ஷோர் என்பவர் சென்று அம்மிருகங்

களை வாங்கிக்கொண்டு வந்திருக்கிறார். வந்திறங்கியிருக்கும் கோவேறு கழுதைகள் உயர்ந்தனவாயு மிருக்கின்றன. வாங்கினது 1200. போர்னிஸ்சிலிருந்து தர்பானுக்கு வருவதற்குள் ஒன்று இறந்துபோய்விட்டது. தர்பானிலிருந்து வங்காள குடாக்கடலுக்கு வரும்வரையில் 10 இறந்துபோய்விட்டன. கல்கத்தாவிற்கு இரண்டு நாள் பிரயாணத்திலிருக்கும்போது உஷ்ணம் பொறுக்க முடியாமல் 120 இறந்துபோய்விட்டன.

பஞ்சு.

அவுஸ் ஆப்காமன்ஸ் சபையில் மிஸ்டர் லீச் என்பவர் உதவி இந்தியா மந்திரியை அடியிற்கண்ட கேள்வி கேட்டனர் :—இந்தியாவில் 1912-ல் எவ்வளவு பஞ்சு மூட்டைகள் விளைந்தன? அம்மூட்டைகளில் சீமையைத்தவிர மற்றவிடங்களுக்கு எத்தனை மூட்டைகள் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றன? மிஸ்டர் மான்டேக் சொன்னபதில் :—1911-12ல் 3,288,000 பேல்கள் விளைந்தன. 1912ல் இங்கிலாண்டைத்தவிர மற்ற தேசங்களுக்கு 1,931,000 பேல்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

நாணய கமிஷன்.

இந்தியா கவர்ன்மெண்டு பொக்கிஷ இலாகா அசிஸ்டெண்ட் செக்ரட்டரியாக விருக்கும் மிஸ்டர் மித்திரா "நாணய கமிஷன்" முனனில் சாக்ஷியம் சொல்ல இங்கிலாண்டிற்குப் பிரயாண மாவார்.

இந்தியா சிலோன் இருப்புப்பாதை.

இராமேஸ்வர தீவிற்கும் சிலோனுக்கும் மத்தியிலிருக்கும் ஆடம்ஸ்ரீப் என்னு மிடத்தை பூராவாய் தென்இந்தியா இருப்புப்பாதை கம்பெனிக்காரர்கள் சர்வே செய்து முடித்திருக்கிறார்கள். இந்தியாவையும் சிலோனையும் சேர்க்கும் ஒரு மார்க்கம் போடப்படுமென்று நம்பப்படுகின்றது.

* * * *

தென்னிந்தியா ரெயில்வே கம்பெனியின் ஏஜண்டு மிஸ்டர் A. முர்ஹெட் சி. ஐ. இ. சென்ற மாதம் 30ௗ இங்கிலாண்டிற்குப் பிரயாணமாய்விட்டார். ஜெனரல் டிராபிக்மானேஜராகவிருக்கும் மிஸ்டர் T. J. மெக்ளேர், அவருக்கு பதிலி; டிப்டி டிராபிக் மானேஜராகவிருக்கும் மிஸ்டர் B. C. ஸ்காட், ஜெனரல் டிராபிக் மானேஜராகவிருப்பார்.

மண்டபத்திற்கும் பாம்பனுக்கும் வளைவின் பேரில் போடப்பட்டுவரும் இருப்புப்பாதை வேலை சீக்கிரம் முடிவு பெறுமென்று எண்ணப்பட்டு வருகிறது.

***

அந்த இருப்புப்பாதையில் 200 அடி நீளத்தில் ஒரு பாலமும் அமைக்கப்படப் போகிறது. அந்தப்பாலத்தை வேண்டும்போது எடுக்கவும் மறுபடி போடவும் கூடிய சூக்ஷ்மம் பொருந்தப்பெற்றது. இந்தப் பாலம் அமேரிக்கா வர்த்தக கம்பெனியாரிட மிருந்து தருவிக்கப்பட்டிருக்கிறது. அந்த கம்பெனியின் பிரதிநிதியும் கூடிய சீக்கிரம் வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

***

இந்தியாவில் பொன் நாணயம் அடிப்பதும் இந்தியாவில் ஒரு சர்க்கார் பாங்கி ஏற்படுத்துவதும் ஆகிய இந்த பிரஸ்னைகளைப்பற்றி கூட விசாரணை செய்யவேண்டுமென்றும் நாணய கமிஷன் தீர்மானித்திருக்கிறது. இந்தியாவில் எல்லா வகுப்பு பிரதி நிதிகளும் சாக்ஷியம் சொல்ல வருவார்கள் என்று நம்புகின்றது. லண்டனில்தான் விசாரணை நடக்குமென்றும் இந்தியாவிற்கு வர உத்தேசமில்லை என்றும் தெரியவருகின்றது.

***

பர்மாவில் தேக்கு மரத்தின் விலை மிகவும் ஏறிநிற்கின்றது. ஏன் எனில் மற்றஸ்தலங்களில் தேக்கு உற்பத்தி சூனியமாய்ப்போய்விட்டது.

இந்தியாவிலிருந்து தான் ஏதேஷ்டமான கிராக்கி வருகின்றதாம். காரணம் பிரஸ்தாப

வருஷம் சுபீக்ஷமாயிருப்பதை முன்னிட்டு ஜனங்கள் தேவைக்கு மேல் வாங்கிவருகின்றுர்களாம். உருண்டைக் கட்டைகள் டன்ஒன்றுக்கு 96 ரூ. க்கு போகின்றதாம்.

ரயில் கம்பேனி தாவா.

கோச்சிங் டாரிப் (Coaching Tariff) என்று சொல்லும்படியான ரெயில்வே சட்டத்தின் 74-வது விதியின்படி இரவு 7-மணிக்கு டிக்கட்டு வாங்கினல் நடு இராத்திரி வரையில் ஒரு நாளாக கணக்கு செய்யப்படுகிறது. ஒரு பிரயாணி சக்கூரிலிருந்து "அல்காண்டோசாண்டிற்கு" ஏப்பிரல்மீ 22வ இரவு 7-மணிக்கு 6 நாள் செல்லும்படியான ரிட்டர்ன் டிக்கட்டு வாங்கினல் 27வ இரவு அலாண்டோவை விட்டுப் புறப்பட்டு சக்கூருக்கு 28வ காலை 6-15 மணிக்குவந்து சேர்ந்தான். கம்பெனியார் பிரயாணியின் பேரில் தாவா செய்தார்கள். சக்கூர் ஜில்லா ஜட்ஜியாகிய மிஸ்டர் மர்பி வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

The Late Mr. Pendlebury.

காலஞ் சென்ற மிஸ்டர் பெண்டல்பரி

:(o):

காலஞ் சென்ற மிஸ்டர் பெண்டல்பரி நைஜாம் காரன்டீட்ஸ்டேட்ரயில்வேயிற்கு ஏஜண்டும் மானேஜருமாக விருந்தார். 1,885ம்வூ முதல் அந்த ஸ்தானத்தை வகித்துக்கொண்டு வருகின்றுர். இவர் கம்பெனியில் உத்தியோக நியமனம் அடைந்த காலமுதல் கம்பெனி விரைவில் விருத்தி அடைந்து வந்திருக்கின்றது. சுதேச அரசாங்க இருப்புப் பாதைகளுக்குள் பிரஸ்தாப இருப்புப்பாதை கம்பெனி தான் மிகவும் முதன்மை பெற்றுச் சிறந்து விளங்குகின்றது. இதன் கீர்த்திக்கும் முதன்மைக்கும் மிஸ்டர் பெண்டல்பரியின் மானேஜ்மெண்டு திறமையே காரணமாயிருக்கின்றது. இவர்கடந்த சில வாரங்களாக் முறைஜுரஉபாதைக்கு உட்பட்டுவந்து சொஸ்த மடைந்தார். மறுபடியும் இலக்காகி நாளது 13ந் தேதி இறந்து போயினர். இவர் சிக்கந்திராபாத்தில் வெகு காலமாக வசித்துவந்தார். ஐதராபாத் சிக்கந்திராபாத் முதலிய ஸ்தலங்களில் நடக்கும் போதுக் கூட்டங்களிலும் கொண்டாட்டங்களிலும் இவர் கலந்திராத சம்பவம் கிடையாது. இவர் பேரில் உள்ள அபிமானத்தை முன்னிட்டும் இவருக்கு மரியாதை காட்டும் பொருட்டும் இவருடைய மரணசெய்தி கேட்டவுடன் ஜனங்கள் கடைகள் முதலியவைகளை மூடிவிட்டது மன்றி ரேயல்வே கம்பெனியார் ஆபிசுகளையும் மூடிவிட்டார்கள். இவர் இரண்டாவது மனைவியாகிய விதவையையும், மூன்று குமாரத்திகளையும் ஒரு புத்திரனையும் விட்டுவிட்டு இறந்து போய்விட்டார். இவருடைய இரண்டாவது மனைவி இந்தியன் சிவில் சர்விஸ் மிஸ்டர் J. D. B. கிரிபில் என்பவருடைய புத்திரி. மூன்று புத்திரிகளுக்கும் விவாகமாய் விட்டது. ஷை புத்திரன் ரேயில்வே இலாகாவில் உத்தியோகமாயிருக்கிறுர். ஆனல் இப்போது இங்கிலாண்டிற்குப் போயிருக்கிறுர்.

Calcutta Tramways.

கல்கத்தா டிராம் கம்பெனியாரின் பேரில் வழக்கு

(:o:)

கல்கத்தா ரிப்பன் கலாசாலையின் சூப்பிரண்டண்டாகிய மிஸ்டர் பாபு அமிர்த சண்டர் கோஷ் கல்கத்தா டிராம் வண்டிக் கம்பெனியின் பேரில் ஒரு நஷ்டதாவா கொண்டுவந்தார். வியாஜ்ஜியமூலம் என்னவென்றுல், வாதி முதல் வகுப்பு டிராம்வண்டியில் பவானிப்பூரிலிருந்து சவுரிங்கிக்கு 1911 ஜனவரியில் போய்க்கொண்டிருந்தார். சவுரிங்கி தான், டிராம்போய் நிற்கவேண்டிய எல்லை. டிராம் ஷை எல்லைக்குச்

சமீபத்தில் வந்து கொடிருக்கும்போது வாதி ஒருவர்தான் வண்டியிலிருந்தார். வண்டி எல்லைக்கு வருவதற்கு முந்தி சவுரிங்கி-தானை வில் நின்றது. வாதி இறங்கினார். வாதி வண் டியில் ஒரு காலும் பூமியில் ஒரு காலும் வைத்துக் கொண்டு இறங்கும் தருணத்தில் டிராம்வண்டி ஓடத்தலைப்பட வாதி பூமியில் தள்ளுண்டு பலமான காயங்கள் அடைந்தது மன்றி இடது கையும் முறிந்து போய்விட்டது. ஆகவே தம்முடைய வலது கைமுறிந்து போனதற்காகவும், டாக்டர் செலவுகளுக் காகவும், மனகஷ்டத்திற்காகவும் ரூ. 5100 க்கு நஷ்டதாவா கொண்டுவந்தார். கோர்ட்டார் வாதிபக்கம் தீர்ப்பு சொல்லி ரூ. 2000 க்கும் செலவு தொகைக்கும் டிக்ரி கொடுத்தார்கள்.

The Rangoon Port Trust.
ரெங்கூன் போர்ட்டிரஸ்ட்

சிலதினங்களுக்கு முந்தி போர்ட் டிரஸ்ட்டைச் சேர்ந்த கிடங்குகளில் தீப்பிடித்து கனத்த நஷ்டமுண்டானது. இதைப்பற்றி பர்மா நெருப்பு இன் ஷியூரன்ஸ் அசோஸியேஷன்காரர்கள் ரெங்கூன்போர்ட் கமிஷனர்களுக்கு எழுதியிருப்பதில் நெருப்பு அவிக்கும் இன் ஜினில் ஏதோபிசகு இருப்பதாலும், கிடங்குகளிலும் அபாயமான சமான்களும் அபாயமற்ற சாமான்களும் கலந்து போட்டு வைக்கப்படுவதாலும் தீவிபத்து அடிக்கடி உண்டாகின்றதென்று எழுதியிருக்கிறார்கள். போர்ட் டிரஸ்ட் கிடங்குகளில் அடிக்கடி தீவிபத்துண்டாகின்ற படியால் பர்மா நெருப்பு இன்சூரன்ஸ் கம்பெனிகாரர்கள் 100 க்கு 12 அணாவிழுக்காடு நெருப்பு இன்சூரன்ஸ் விகிதத்தை உயர்த்தியிருக்கிறார்கள். போர்ட் டிரஸ்டுக்காரர்கள் ஒழுங்கான ஏற்பாடு செய்து தீசம்பவங்கள் பெரும்பாலும் நடக்காமல் இருக்கும்படி ஏற்பாடு செய்யும் பரியந்தரம் 100 க்கு 12 அணா விகிதம் ஊர்ஜிதத்திலிருக்கும்.

The Finance Commission.
நாணய கமிஷன்

இந்திய நாணயவிஷயமாக ஒரு கமிஷன் இங்கிலாண்டில் நியமிக்கப் படிட்டிருக்கிறதென்று முந்திய சஞ்சிகையில் சொல்லியிருந்தோம். அந்த கமிஷன் இந்தியாவிற்கு வந்து விசாரணை செய்கிறதோ அல்லது இங்கிலாண்டிலேயே விசாரணை செய்யப்போகிறதோ இன்னும் தெரியவில்லை. விசாரணை செய்யப்பட வேண்டிய சாக்ஷிகள் இன்னார்கள் என்று கமி கமிஷனின் பிரசிடெண்டும் அங்கித்தினர்களும் நிர்ணயிப்பார்போ லிருக்கின்றது கல்கத்தாவிலிருந்து சாக்ஷியம் சொல்லப் போகிறவர்களுடைய பெயர்கள் பத்திரிகை களில் பயிரங்கப்படுத்தப் பட்டிருக்கின்றன. பம்பாயிலிருந்து மெசர்ஸ் கிரேகாம், கோக்கலே, டால் ஆகிய இம்மூவர்களும் அனுப்பப் படுவார்கள் என்று வர்த்தகர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். கராச்சியிலிருந்து மிஸ்டர் வெப் போவதாக ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார். மதிராஸ் பாங்கியிலிருக்கும் மிஸ்டர் அன்டர் அனுப்பப்படுவார் என்று எண்ணப் படுகிறது. கான்பூர் வர்த்தக ஆலோசனை சபையும் ஒரு மெம்பரை அனுப்ப யோஜனை செய்து கொண்டிருக்கிறது. பஞ்சாப் சேம்பரும் அப்படியே. அலையன்ஸ் பாங்கியைச் சேர்ந்த சர் ஆர்தர் கோரும் தருவிக்கப்படுவார் போல் பிரஸ்தாபமாயிருக்கிறது.

Wireless Telegraph Stations of the World.

உலகத்திலிருக்கும் தந்திகம்பிகளற்ற தந்தி ஆபீசுகள்

———:(*):———

தந்திகம்பிகள் போடப்படாமலே தந்தி ஆபீசுகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன வென்று பத்திரிகைகள் வாசிப்பவர்கள் அறிந்து கொண்டிருக்கக்கூடும். உலகத்திலுள்ள துறைமுகப்பட்டணங்களில் 375 துறைமுகங்களில் தந்தி கம்பிகளற்ற தந்தி ஆபீசுகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுள் யுனைடட் ஸ்டேட்சில் 142, கிரேட்பிரிட்டன் 43, கனடா 33, ஜர்மனியும் குடியேற்ற நாடுகளிலும் 22 இட்டாலி 19, ருஷியா, 19, பிரான்சு 17, ஸ்பேயின் 10, டென்மார்க் 9, பிரான்சு குடியேற்ற நாடுகளிலும் பிரிடிஷ் குடியேற்ற நாடுகளிலும் அனேக இம்மாதிரி ஆபீசுகளிருக்கின்றன. சண்டை ஸ்டீமர்களிலும் தந்திகம்பியற்ற தந்தி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. யுனைட்டெட் ஸ்டேட்ஸ் சண்டைக்கப்பல்களில் இம்மாதிரி தந்தி ஆபீசுகள் 247 அமைக்கப்பட்டிருக்கின்றன. கிரேட் பிரிடனில் 213, பிரான்சில் 141, ஜர்மனி 112, இட்டாலி 77, ஜப்பான் 70, ருஷியா 70, வர்தக கப்பல்களுக்கு கிரேட் பிரிடன் 455 யுனைட்டட் ஸ்டேட்ஸ்-253, ஜர்மனி-206, பிரான்சு 68, இட்டாலி 47,

---

Wages of Workmen.

வேலைக்காரர்களின் கூலி

———:(*):———

இங்கிலாண்டில் சராசரி வேலைக்காரர்களுக்கு வாரம் ஒன்றுக்கு 20 ஷில்லிங் அதாவது ரூ 15 வந்ததால் முக்கால் பாகத்தை சாப்பாட்டிலும் பாக்கி கால்பாகத்தை துணிமணி மற்ற தேவைகளிலும் செலவு செய்கின்றனரும். அப்படிச் செலவு செய்தும் அவனுக்கு நல்ல சாப்பாடு கிடைக்காதாம். வாரம் ஒன்றுக்கு 20 ஷில்லிங் அல்லது ரூபா 15 சம்பாதிக்கும் இங்கிலாண்டு வேலைக்காரன் கதியே இப்படி யிருந்தால் இந்தியாவில் மாதம் ஒன்று வேலை செய்தபோதிலும் 15 ரூபாய் கூட கிடைக்கவகையற்று திண்டாடும் கூலிக்காரன் கதியை நாம் சொல்லவும் வேண்டுமோ?

Air fleet for the Indian Army.

இந்திய சேனைக்காக பறக்கும் யந்திரங்கள்.

இந்திய சைனியத்திற்காக ஆகாயத்தில் பறக்கும் அனேக யந்திரங்கள் இங்கிலாந்தில் செய்யப்படுவதற்கு கவர்ன்மெண்டார் உத்தேசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

Indo-Ceylon Railway.

இந்தியா சிலோன் இருப்புப்பாதைகள்

———:(++):———

சிலோனுக்கு சேனாதிபதியாகவும் கவர்னராகவும் இருக்கும் சர்ஹென்ரிமாக்காலம் என்பவர் 1907 முதல் 1913 வரையிலுள்ள தம்முடைய பரிபாலனத்தைபற்றி சட்டசபையில் பேசினபோது மன்னார் இருப்புப்பாதை தம்முடைய காலத்தில் போடப்பட்டது, தம்முடைய பரிபாலனத்திற்கு ஒரு சிறந்த அடையாளம் என்றும் அந்த இருப்புப்பாதையால் இந்தியாவும் சிலோனும் ரயில்மார்க்கமாய்ச் சேர்க்கப்படுமென்றும் 1909 ம் வருஷத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த வேலை பிரஸ்தாப வருடம் முடிவடைவதற்கு முந்தி முற்றுப்பெறும் என்றும் இதனால் கொளம்பு துறைமுகம் தென்னிந்தியா துறைமுகமாய்மாறி பிரபலமாயிருக்குமன்றி சிலோனுக்கு அனேக நன்மைகள் உண்டாகு மென்றும் சொன்னார்.

India and Naval Defence.
இந்தியாவும் கப்பல் படை பாதுகாப்பும்.

——(✱:)——

யுத்தகாலங்களில் இந்தியாவின் சமுத்திர மூலியமான வியாபாரத்திற்கு யாதொரு இடைஞ்சலுண்டாகாமல் பாதுகர்த்து வரும்படி இந்தியா கப்பல் படையை விருத்திசெய்யவேண்டு மென்றும் அதற்காக இந்தியா கவர்ன் மெண்டார் அயன் கவர்ன்மெண்டாருக்கு ஏதேனும் பொருளுதவி செய்துவரவேண்டு மென்று சென்னைச் சேம்பர் ஆப் காமர்ஸ் ஒரு தீர்மானம் பாஸ் செய்து பம்பாய் சேம்பர் ஆப் காமர்விற்கு அனுப்பினது. பம்பாய் சேம்பர் காரர்கள் அபிப்பிராயத்தை ஏற்றுக் கொண்ட போதிலும் பம்பாய் உள்நாட்டு வியாபார விர்த்திக்குத்தக்கபடி ஜி.ஐ.பி. பி. பி. அண்டு சி. ஐ. இருப்புப்பாதை கம்பெனிக்காரர்கள் சமாளிக்கமுடியாமலிருக்கிறபடியால் இருப்புப்பாதைகள் விஸ்தரிக்கப்பட்டு விருத்தி செய்யப்பட வேண்டியதாயிருப்பதாலும் அது தங்களுக்கு பிரதமமான காரியமாக விருப்பதாலும் தாங்கள் கப்பல்படை சம்பந்தமாக இப்போது பணம் உதவிசெய்யும்படி தங்களுடைய கவர்ன்மெண்டார் வற்புறுத்த இயலாதென்று சென்னைச் சேம்பருக்கு எழுதியிருக்கிறார்கள்.

Trade Marks Trade Notes.
வியாபார சாமன்களின் குறிப்பு.

——(:o:)——

"Boardman" (போர்ட்மான்) என்று, தயார் செய்யப்பட்ட புகையிலையின் பேரில் அடையாளம் போடப் பட்டிருந்தது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல வென்றும் ஏன் என்றால் அது ஒரு மனிதனுடைய பெயர் என்றும், மற்ற சாமான்களிலிருந்துபிரஸ்தாபம் அடையாளம்போட்டசாமானைப் பிரித்து அடையாளம் காண்பிப்பதற்கு அந்தப் பெயர் பொருந்த மாட்டாதென்று அப்பில் கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

Calcutta Trades Association.
கல்கத்தா வர்த்தக சங்கம்

——:(✱):——

கல்கத்தா வர்தக சங்கத்தின் பேரில் மெசர்ஸ் ஹாரி கிளார்க் அண்டு கோ என்பவர்கள் கல்கத்தா ஸ்மால்காஸ் கோர்ட்டில் ஒரு தாவா கொண்டுவந்தார்கள். பர்மா ஆப்காரி இன்ஸ்பெக்டர் மிஸ்டர் மாலி என்பவர் ரூபா 33-12 ஷை கிளார்க் கம்பெனியாருக்கு கொடுக்க வேண்டியதாயிருந்தது இந்தத்தொகையை வசூல் செய்யும்படி கம்பெனியார் வர்த்தகசங்கத்தின் காரியதரிசிக்கு எழுதியிருந்தனர். காரியதரிசி சம்மதித்தார்; ஆனால் வசூல்செய்யவில்லை. ஆகையால் கம்பெனியார் சங்கத்தின் பேரில் தாவாசெய்தார்கள்; சங்கத்தில் மெம்பர்களாகயிராதவர்களுடைய கடன்களை வசூல் செய்ய கட்டுப்பட்ட வர்களல்லவென்றும் காரியதரிசி பிரஸ்தாபகடனை வசூல்செய்ய ஒப்புக்கொண்டிருந்தால் அவர் காரியதரிசியாயிருக்கும் தரப்பில் ஒப்புக் கொண்டதல்லவென்றும் சங்கம் காக்ஷி சொன்னது. வாதிகளாகிய கம்பெனியார் சொன்ன கக்ஷி என்னவென்றால் பிரதி வாதிகள் அதற்குமுன் பலதடவை மெம்பர்களாக விராதவர்களுடைய கடன்களையும் வசூல் செய்திருக்கிறார்கள், என்றும் பிரஸ்தாபகடனையும் உண்மையில் வசூல் செய்திருக்கிறார்கள் என்பதே; இன்னும் தீர்ப்பு சொல்லப்படவில்லை.

INDUSTRIES.

கைத்தொழில்.

Government Commercial Institute Calcutta.

கல்கத்தா கவர்ன்மெண்ட் வியாபார சாலை.

—(:‡:)—

சர்க்காரிடமிருந்து உபகாரபணம் பெற்றுக் கொண்டு இங்கிலாண்டு, அமெரிக்கா, ஜப்பான் முதலிய வெளி தேசங்களுக்குச் சென்று கைத்தொழில் படிப்பு படித்து வந்த மாணுக்கர்களுடைய யோக க்ஷேமங்கள் எப்படியிருக்கின்றன என்பதைக்காட்டும் பொருட்டும் கல்கத்தா கவர்ன்மெண்டு வர்த்தகசாலை ஏதேனும் பிரசுரங்கள் வெளிப்படுத்தி யிருக்கின்றனவா என்று சர் J. D. ரீஸ் என்பவர் இந்தியா உதவி மந்திரியான அவுஸ் ஆப் காமன்ஸ் சபையில் ஒரு கேள்வி கேட்டார். மிஸ்டர் மான் டேக் சொன்னபதில்:—வர்த்தகசாலை அப்பேர்ப்பட்ட பிரசுரம் வெளிப்படுத்தியிருக்கிறது அல்லது வெளிப்படுத்துகிறதில்லை என்றும் அன்னியதேசங்களுக்குச் சென்று படிப்பதற்காக யாரேனும் சர்க்காரிட மிருந்து உபகாரப்பணம் பெருகிறார்களா வென்றும் இந்தியா காரிய தரிசிக்கு தெரியமாட்டாது. உள்நாட்டுத் தேவைக்காக சாலை யேற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகையால் இதைப் பற்றி விசாரணை செய்வதவசியமல்ல வென்று இந்தியா காரியதரிசி அபிப்பிராயப்படுகின்றனர்.

The Artificial Silk Industry.

பட்டு செய்யும் தொழில்.

பாரிஸ் நகரிலிருக்கும் யுனைட்டெட் ஸ்டேட்ஸ் அரசாங்கப் பிரதிநிதியாகிய மிஸ்டர் பிராங்க் H. மேசன் என்பவர் பிரான்சு தேசத்தில் பட்டுசெய்யும் தொழிலைப்பற்றி அடியிற்கண்டபடி எழுதியிருக்கின்றனர்:—

கடந்த ஒன்றரை வருஷகாலத்திற்குள் பட்டு செய்யப் படுவதற்கு இரண்டு நூதன முறைகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. ஒன்று ரோனிலும் மற்றொன்று ஹார்பிளரிலும்; பின்னால் சொல்லப்பட்ட விடத்தில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் முறை லாபகரமாகப் பிரயோகப் படுத்தப்பட்டு வரலாமா வென்று பிரான்சு தேசத்திலிருக்கும் ஒரு பாரி பஞ்சுவர்த்தக கம்பெனியார் பரீக்ஷித்து வருகிறபடியால் அத்தொழில் ஆரம்ப நிலையிலிருக்கிறது. மேலே சொல்லப்பட்ட இரண்டு முறைகளிலும் மரக்கூழுக்கு பதிலாக பருத்தி உபயோகப்படுத்தப்பட்டு அதனின்று பட்டு தயார் செய்யப்பட்டு வருகிறது. இயற்கைப்பட்டு ஜலத்தில் போட்டால் சிலிர்த்துப் போகும். ஆனல் இந்த இரண்டு முறைகளால் உண்டாகப்படும் பட்டு ஜலத்தில் போட்டால் சிலிர்க்கிறதில்லை. ரோனிலிருக்கும் கம்பெனியில் தினம் ஒன்றுக்கு 580 ராத்தல் நிறையுள்ள பட்டு தயார் செய்யப்பட்டு வருகிறது. அவைகளில் சில ராத்தல் பட்டு, லியான் நகரிலிருக்கும் பட்டுத் தொழிலாளியிடம் ஒப்புவிக்கப்பட்டு வருகின்றது. ஏன் எனில் ரோனிலிருக்கும் கம்பெனிக்கு இவர் ஷை பட்டு செய்யும் தொழிலில் உதவிபுரிந்து வருகின்றனர். பாக்கி ராத்தல் பட்டு அமெரிக்காவிலிருக்கும் பட்டு தயார் செய்யும் பெயர் போன கம்பெனியாருக்கு அனுப்பப்பட்டு வருகின்றது. இந்த கம்பெனியார்கள் ரோனில் புதியமுறை கண்டுபிடிக்கப்பட்டிருப்பதில் உற்சாக முடையவர்களாக விருக்கிறார்கள். ரோனில் செய்யப்படும் பட்டு உண்டைகளை லண்டன் நகரிலிருக்கும் ஒரு நிபுணருடைய பரிசோதனைக்கும் அபிப்பிராயத்திற்கும் அனுப்பப்பட்டது. இவர் அவ்வுண்டைகளை தண்ணீரில் நனைத்து சிறிது நாழிகை சென்று பிழிந்து சாதாரண அடுப்பில் வேகவைத்தார். இதன் பிறகு ஜலத்தில் போடப்படக்கூடாத பட்டுடன் ஒத்திட்டுப் பார்த்து ரோனின் பட்டு பளபளப்பிலாவது, அல்லது அழுத்தத்திலாவது கம்மிப்படவில்லை

என்று அபிப்பிராயம் கூறினார். பருத்தி நூலும் இயற்கைப்பட்டு நூலும் கலக்கப்படாத ரோ னின் பட்டாலேயே ஒரு உடுப்பு தயார் பட்டு 1911-ம் வருஷத்திய கோடைகாலத்தில் தரித் துக் கொள்ளப்பட்டது. இந்த உடுப்பை நிபு ணர்கள் பரிசோதித்து நன்றாயிருக்கிறதென் றும் உடை தாளுகிறதென்றும் இன்னும் சொ ல்லப்போனால் உண்மையான பட்டிற்கு மேல் சிலாக்கியமாக விருக்கிறதென்றும் அபிப்பிரா யம் கூறினார்கள்.

Palmyra Fibre.
பனை நார்.

—(:-:)—

கடந்த மார்ச்சு மாதத்தோடு முடிவாகும் ஒரு வருடத்தில் 14-லக்ஷ ரூபாய் பெறுமான முள்ள 86,788 அந்தர் நிறையுள்ள பனை நார் அன்னிய தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப் பட்டிருக்கிறது. இந்த ஏற்றுமதி கடந்த மூன்று வருஷமாக இறங்குமுகமாயிருந்து வருகின்றது 1910-1911-ல் 97-ஆயிரம் அந்தர் ஏற்றுமதி செய்யப்பட்டது. அடுத்த வருஷத்தில் குறை ந்துபோய் 90-ஆயிரம் அந்தர்தான் ஏற்றுமதி செய்யப்பட்டது. நம் தேசத்திலிருந்து பெரு வாரியாக வாங்குகிறவர்கள் ஜர்மானியர்களும் பெல்ஜியர்களும்; இவைகளுக்குப் பின்பு யுனை ட்டட் கிங்டம் என்று சொல்லவேண்டும். சிலோன், ஆஸ்டிரேலியா, பிரான்சு, அமெரிக் கா, ஐரோப்பாவிலுள்ள இன்னும் சில தேசங் கள்—ஆகிய இவைகளும் பனை நாரை இறக்கு மதி செய்கின்றன. பனை நார் ஏற்றுமதி வரு ஷாவருஷம் குறைந்துகொண்டு வருகிறதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. இந்த நாரை இறக்குமதி செய்யும் தேசத்தார்கள். எதற்காகப் பிரயோகித்து வருகிறார்கள். என் றும் அந்தக் கைத்தொழிலை நம் தேசத்தில் உற்பத்தி செய்ய கூடாதா என்பதும் ஆழ்ந்து நம் தேசத்தார் விசாரணை செய்யவேண்டிய காரியங்களில் ஒன்று.

Organisation of Labour.
கூலிக்காரர்கள் செய்யும் வேலையை ஒழுங்குபடுத்தல்.

—:*:—

இந்தியாவில் பெரிய கைத்தொழில் முயர்ச் சிகள் ஆரம்பிக்க போதுமான மூலதனமும் சாஸ்திர நூதன முறைகளை அனுசரித்து செய்யக் கூடிய அறிவும் சூனியமாயிருக்கிறது. இந்தக்காரணங்களை முன்னிட்டுத்தான் கைத் தொழில் விஷயத்தில் இந்தியா பிற்போகான நிலைமையிருக்கின்றது. கூலிவேலைகளை ஒழு ங்குபடுத்தும்படியான சாதாரண அறிவுகூட அற்றவர்கள் மைக்காக (Mica) சுரங்கங்க ளின் மானேஜர்களாக நியமிக்கப்படுகிறார்கள். மைக்காச் சுரங்கங்களிலிருந்து மைக்காவை பூமியின் பேரில் கொண்டுவருவதற்கு மைக் காவை சுரங்கம் செய்து எடுப்பதற்கு எவ்வளவு பிடிக்கிறதோ அதைவிட 14 மடங்கு அதிக மாய்ப் பிடிக்கிறது இவர்கள் இப்படி மானேஜ் மெண்டு செய்துவந்தால் நமது சுரங்கங்களில் நஷ்ட முண்டாகிற தென்பதற்கு கேட்கவும் வேண்டுமோ? இங்கிலாண்டு முதலிய தேசங் களுக்குச் சென்று சாஸ்திர முறைகளை அனு சரித்துக் கைத்தொழில் செய்யத்தெரிந்து கொ ண்டு வருவதில் பலனில்லை. எந்தவிதமாய் வேலையை நடத்தினால் செலவு கம்மிப்படும் என்று தெரிந்துகொள்ளுவது சாஸ்திர ஞானத் தைவிட உயர்ந்த தென்பதை எவரும் ஒப்புக் கொள்ளுவார்கள்.

இப்பேர்ப்பட்டஞானம் சாமானியமாக உண் டாகமாட்டாது. கலாசாலையில் படித்ததால் உண்டாகமாட்டாது. ஆலையில் உத்திரவாத முள்ள வேலை பார்க்கும் அனுபோகத்தாலும் வேலைக்காரர்களுடன் பழகும் அனுபோகத்தா லும் உண்டாக வேணுமே ஒழிய மற்றபடி இலேசில் உண்டாகமாட்டாது. கூலிக்காரர்கள் தேசத்திற்கு தேசம் வேறுபட்டிருப்பது போல

மண் வெட்டி, கோடாலி முதலிய கூலிக்காரர்களது சாமான்களிலும் பலவிதமிருக்கின்றன. எந்த ஆயுதத்தை எந்தக் கூலிக்காரனிடம் கொடுத்தால் உத்தேசித்த காரியம் கம்மியான செலவுடன் முடியுமென்று தெரிந்துகொள்ள வேணுமென்று ஒருவர் பம்பாயில் பிரசுரமாகும் டெக்ஸையில் ஜர்னலில் எழுதியிருக்கின்றனர்.

Mr. H. J. Newson.
மிஸ்டர். H. J. நியூசன்.

—(:-:)—

மிஸ்டர் H. J. நீயுசன் என்பவர் இந்தியர், அல்லகாபாத்தில் படிப்பு பெற்றவர். பாலியத்திலே பெற்றோரை இழந்தவர். பாலியபடிப்பு அடைந்த பின்பு இன்ஜினீர் உத்தியோகத்திற்கு படிக்கவேண்டுமென்று ஆசைப்பட்ட போதிலும் சந்தர்ப்பங்களை உத்தேசித்து மராமத்து இலக்கா அக்கவுன்டன்ட் உத்தியோகத்திற்கு வாசித்து 50 ரூ. சம்பளமுள்ள கிளர்க் உத்தியோகத்தில் அமர்ந்தனர் இதிலிருந்து 180 சம்பளம் வரையில் உத்தியோக உயர்வடைந்தார். இந்த உத்தியோகங்களில் மீர்ந்த பணத்தைக்கொண்டு இங்கிலாண்டிற்கு என்ஜினீரிங் உத்தியோகத்திற்கு படித்து கவுரவத்துடன் தேறினர். இதன்பிறகு இந்தியா கவர்ன்மெண்டார் உபகாரப்பணமும் கொடுத்து உதவி வந்தார்கள். மான்சஸ்டர் நெசுவு தொழில் பள்ளிக்கூடங்களில் சேர்ந்து அந்த வித்தையையும் கற்றுக்கொண்டு இந்தியாவுக்கு திரும்பிவரும் சமயமாகவிருக்கின்றனர். இவருடைய வித்வம் ஞானமும் ஆகிய இவற்றால் இந்தியாவிலிருக்கும் நெசுவு ஆலைகள் விசேஷமாகப் பயனடையுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

Development of industries in Maldives.
லக்ஷ தீவுகளில் கைத்தொழில் அபிவிர்த்தி.

—(:-:)—

லட்சத்தீவுகளுக்கு அரசனாயிருக்கும் சுல்தான் தம்முடைய புத்திரர்களை கொளும்பில் படிக்க வைத்திருப்பதுமின்றி ஷை தீவுகளின் கைத்தொழிலையும் வியாபாரத்தையும் விருத்தி செய்யும்பொருட்டு ஒரு ஸ்டீமர் வாங்கப்போகின்றனர். இந்த ஸ்டீமர் லக்ஷத்தீவுகளுக்கும் கொளும்பிற்கும் ஓடிக்கொண்டிருக்கும். லக்ஷத்தீவு மச்ச சரக்கையும் தேங்காய்க் கொப்பரையையும் லக்ஷதீவுகளிலிருந்து கொளும்பிற்குக் கொண்டுபோகுமாம். 400 டன்களுக்கு குறையாமலும் 600 டன்களுக்கு மேற்படாமலும் பாரம் கொண்டுபோகுமாம். ஸ்டீமரில் சரக்கு ஏற்றப்படுவதுமன்றி பிரயாணிகளும் ஏற்றப்படுவார்களாம். ஆனால் பிரயாணிகள் சம்பந்தப்பட்ட வரையில் சுல்தானுடைய குமாரர்களும் குடும்பத்தார்களும் தான் பிரதமத்தில் பிரயாணிகளாக விருப்பார்கள். அந்த ஸ்டீமரில் முதல் வகுப்புக்கு இரண்டாவது வகுப்புக்களும் ஏற்பாடு செய்யப்படும். முதல் வகுப்பில் மின்சார விளக்கும் மின்சார விசிறியும் போடப்பட்டிருக்கும்.

Indian Iron Production.
இந்தியாவின் இரும்பு.

(Pig Iron) என்று சொல்லும்படியான இரும்பு இந்தியாவில் தயார் செய்யப்படலாம். கல்கத்தாவில் டன் ஒன்றுக்கு $5\frac{3}{4}$ டாலர் அடங்குகின்றது என்றும், கல்கத்தாவிலிருந்து சான்பிரான்சிஸ்கோவுக்கு நேரே இப்போது ஸ்டீமர்கள் வருகின்றனவென்றும், இப்போது ஒரு ஸ்டீமர் இந்தியா இரும்புச்

சரக்குடன் புறப்பட்டு அமெரிக்கா விலிருக்கும் யுனைட்டட் ஸ்டேசிற்கு வந்துகொண்டிருக்கிறதென்றும், இதுதான் முதல் முதல் இரும்புச்சரக்கு கொண்டு வரும் ஸ்டீமர் என்றும், டன் ஒன்றுக்கு ஸ்டீமர் சத்தம் $5\frac{1}{2}$ டாலர் ஆகிறதென்றும், தீர்வை டன் ஒன்றுக்கு 11 செண்டு ஆகிற தென்றும், ஆக சான்பிரான்சிஸ்கோ (San Francisco) வந்து சேர்ந்தால் ஷி இந்தியா பிக் (Pig) இரும்பு $11\frac{1}{2}$ டாலர் அடங்குகிற தென்றும், பிரஸ்தாப இரும்பு பசிபிக் சமுத்திரக் கரையோரங்களிலுள்ள துறை முகங்களில் 220 டாலர்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன வென்றும், ஒரு வியாஜ்ஜியத்தில் யுனைட்டெட்ஸ்டேட்ஸ்களிலிருக்கும் நியூயார்க் என்னும் நகரிலுள்ள இரும்பு சங்கத்தின் பிரசிடெண்டாகிய மிஸ்டர் பாரல் வாக்குமூலம் கொடுத்திருக்கின்றனர்.

CO-OPERATION.

கூட்டுறவு.

The Madras Provincial Conference.

சென்னை மாகாணக் கூட்டம்

சென்னை மாகாணக்கூட்டம் இவ்வருஷம் திருச்சினாப்பள்ளியில் கூடினது. ஆனரபில் மிஸ்டர். ம. ருசச்சந்திரராவ் பிரசிடெண்டாக விருந்தார். அவருடைய பிரசங்கத்தில் ஐக்கிய நாணய சங்க முயற்சியைக் குறித்தும் சென்னைராஜதானி ஜனங்களின் பொருளாதார நிலைமையைக் குறித்தும் வெகுவாய் எடுத்துப் பேசினார்.

ஐக்கிய நாணய சங்க முயற்சி மித மிஞ்சின மும்மரத்துடனும் உற்சாகத்துடனும் நடத்தப்பட்டு வருவதில் அதன் நோக்கத்தை ஜனங்கள் மறந்து போவார்கள் என்று கவர்ன்மெண்டார் நினைக்கக்கூடாது. அதுவிஷயமாய் நாம் இன்னும் செய்யவேண்டிய வேலையின் விஸ்தீரணத்தை உற்று நோக்கினால், நம்முடைய உற்சாகத்தை அடக்குவதற்கு அதுவே போதுமானது. ஆகையால் ஜனங்கள் உற்சாகம் கொண்டிருப்பதாக எண்ணி எச்சரித்து கூட்டுப் பான்மை முயற்சிகளை விருத்திசெய்து வருவதை நிறுத்திப்போட லாகாது என்று சொன்னார்.

சென்னை ராஜதானியில் தீர்வை செட்டில் மெண்டு செய்யப்படுவதில் கவர்ன்மெண்டார் அனுசரித்து வரும் கொள்கைகளைப் பற்றி வெகு காலமாக இந்த கான்பரன்ஸ் ஆக்ஷேபித்துக்கொண்டு வருகின்றது. இந்தியன் நாஷனல் காங்கிரசும் வருஷா வருஷம் இந்த விஷயத்தைக் குறித்து தர்க்கித்து தீர்மானங்கள் செய்துகொண்டு வந்திருக்கிறது. செட்டில் மெண்டு அடிக்கடி செய்யப்பட்டு வருவதும், புதிய செட்டில்மெண்டு செய்யப்படும்போது அனுசரிக்கப்பட்டு வரும் கொள்கைகளும் கனத்த கவலையுடன் வெகுகால முதல் விசாரணை செய்யப்பட்டு வருகின்றன. நில வரி விஷயத்தில் கவர்ன்மெண்டாரால் அனுசரித்து வரப்படும் கொள்கை இந்தியாவின் வைசிராயாக விருந்த லார்ட் கர்ஜனால் 1903ல் பரிசீலனை செய்யப்பட்டது. ரயத்தினுடைய பொருளாதார நிலைமையைப் பற்றி அது முதல் இரண்டுவிதமான அபிப்பிராயம் உண்டாயிருக்கின்றது. சட்ட நிரூபண சபைகள் விஸ்தரித்து புதிப்பிக்கப் பட்டபிறகு இந்த விஷயம் லோகல் கவுன்சிலிலும் அயன் கவர்ன்மெண்டு

கவுன்சிலிலும் பலதடவை பலவிதமாக கவர்ன்மெண்டாருடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

விவசாயத்தையே ஜீவன ஆதாரமாகக் கொண்டிருக்கும் இந்தியாவைப்போலொத்த ஒரு தேசத்தில் விவசாயத்தின் அசல் லாபத்தில் 100-க்கு 50 விகிதம் தீர்வை போட்டு வந்தால்கிரிஷிகளுக்கு பெரும்பாலும்யாதொன்றும் மீறமாட்டாதென்று நான் சொல்லவும் வேண்டுமோ! கிருஷியின் பொருளாதார நிலைமை ஏதேனும் மாறுதலடைவதற்கு ஏதுவுண்டோ? இல்லை. நிலத்தீர்வை விஷயத்தில் கவர்ன்மெண்டாருடைய கொள்கைகளைப் பற்றியும் செட்டில்மெண்டு காலங்களில் அவர்கள் அவைகளை அனுசரிக்கும் விஷயத்தைக் குறித்தும் நான் விவரமாய் எடுத்துச்சொல்ல விரும்பினாலும் எனக்கு இப்போது போதுமான அவகாசமில்லை என்று எண்ணுகின்றேன். ஆனால் அவற்றில் ரயத்துவின் பொருளாதார நிலைமையைப் பற்றி பூராய் விசாரணை செய்யவேண்டுமென்பதற்குறித்தான சில அவசியமான பாகங்களை மட்டிலும் இவ்விடத்தில் எடுத்துச் சொல்லுகின்றேன்.

இந்த இராஜதானியில் 1315 ம் பசலியின் கணக்கை உதாரணமாக எடுத்துக் கொள்ளுவோம். அக்கணக்கின்படி தனிப்பட்டாக்களும் சேர்ந்தபட்டாக்களுமாகச் சேர்ந்து 5,851,699 பட்டாக்களிருக்கின்றன. இவற்றுள் 10 ரூபாயும் அதற்குக் குறைந்த தீர்வையும் செலுத்தும் பட்டாக்கள் 2,454,697, அதாவது மொத்த பட்டாதார்களுக்குள் மூன்றில் ஒரு பாகத்திற்கு மேலாகின்றது. இவர்கள் சென்னை ராஜதானியில் சாகுபடியாகும் நிலத்தின் மொத்தத்தின் கால்பாகத்திற்கு மேலிருக்கிறார்கள். ரூபாய் 10ம் 10க்கு குறைவாகவும் கிஸ்தி செலுத்தும் பட்டாதார்கள் மொத்த பட்டாதார்களில் மூன்றில் ஒரு பாகமாயிருக்கிறார்கள். நிலவிஸ்தீரணத்தில் நான்கில் ஒருபாக நிலத்தை அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள். இவர்கள் பெரும் பாலர்களுக்கு நிலத்திலிருந்து வரவேண்டிய வருமானத்தைத்தவிர வேறே ஜீவன ஆதாரமில்லை, 10 ரூபாய்க்கு மேல் கிஸ்தி செலுத்துகிறவர்களுடைய நிலைமையைப்பற்றி இப்போது நான் பேசவிரும்பவில்லை. 10 ரூபாய் கிஸ்தி செலுத்துகிறவர்களுடைய நிலைமையை உத்தேசித்துப் பார்க்குமளவில் அவர்கள் கொடியதாரித்திரியத்தால் பீடிக்கப்பட்டு வருகிறார்கள் என்பதையும் பூர்வீககாலமுதல் நிலத்தைச் சாகுபடி செய்துவரும் இவ்வகை ஜனங்களிடமிருந்து வரும்படியில் சரிபாதி கேட்டு வாங்கிவருவதில் கவர்ன்மெண்டார் நியாயமானபாதையில் நடந்து வரவில்லை என்பதையும் யாரேனும் ஆக்ஷேபிக்கக் கூடுமோ? செட்டில்மெண்டு செய்வதில் கவரன்மெண்டார் அனுசரித்து வரும் கொள்கையை உற்று நோக்கினால் 10 ரூ தீர்வை செலுத்தும் பட்டாதாரனிடம் அசல் வருமானத்தில் ரூ 20 மீதப்பட்டு அவன் கைவசமிருப்பதாக கவர்ன்மெண்டார் நினைப்பதாகத் தெரிகிறது. அப்படியிருப்பதாக எண்ணிக் கொண்டபோதிலும் அப்படி ரூ 20 மீந்திருப்பது ஒருபொருட்டாக எண்ணப்படமாட்டாது. ஏன் என்றால் சுபீக்ஷமான ஒரு வருடத்தில் ரயத்து சேர்த்து வைத்திருக்கிற பணத்தை சுபீக்ஷ மற்றவருடத்தில் செலவு செய்துவிடுகிறான் என்று கவர்ன்மெண்டாரே சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் வருஷா வருஷம் கவர்ன்மெண்டார் அசல் வருமானத்தில் சரிபாதி ரயத்துகளிடமிருந்து கேட்டு வாங்கி விடுவதால் சென்னை ராஜதானியின் ரயத்துகளுடைய பொருளாதார நிலைமைகுன்றி வருகின்றது. தீர்வை உயர்ந்திருப்பதற்கு தக்கபடி நெல்விலை உயர்ந்து அதனால் அவன்லாபம் அடையக் கூடுமென்று கக்ஷிசொல்லப்படுகிறது. இது ஒரு

ஒப்புக் கொள்ளப்படக்கூடிய கக்ஷியாக விருந்த போதிலும் மேலே சொல்லப்பட்ட லாபத்தை அடையக் கூடியவர்கள் இவ்வகையான பட்டாதார்கள், அதாவது 10 ரூபாய் கிஸ்தி செலுத்தும்படியான பட்டாதார்களல்ல. ஏனெனில் இவர்கள் பெரும் பாலும் ஏழைகள்; இவர்களுடைய நிலத்தில் கிடைக்கும் மாசூல் இவர்களுடைய செலவிற்கே போதமாட்டாது. மேலும் இவர்களே உயர்ந்தவிலை கொடுத்து ரொக்கத்திற்கு வாங்கி வரவேண்டியிருக்கிறது. கவர்ன்மெண்டார் ஜனங்களுடைய நன்மையை உத்தியேசிக்குமளவில் வரி பளுவைக் குறைக்கவேண்டும். சீனு ஜனங்களுக்குசன்மார்க்கம் உண்டாக வேண்டு மென்கிற கருத்துடன் பிரிடிஷ் கவர்ன் மெண்டாரும் பிரிடிஷ் பார்லிமெண்டாரும் அபின் வருமானத்தை இழக்கும்படி இந்தியாவைக் கட்டாயப்படுத்தியிருக்கும் போது இந்தியாவின் ஏழை ஜனங்களுடைய பரிதாபகரமான நிலைமை அவர்களுடைய கவனத்தைப்பற்றுமலிருப்பது கிருஷிகளுடைய விதிப்பயனே ஒழிய மற்றப்படி வேறில்லை. ஆகையால் அதுவிஷயத்தைதீர்க்க விசாரணை செய்ய கவர்ன்மெண்டு அதிகாரிகளும் கவர்ன்மெண்டு சம்பந்த மற்றவர்களும் சேர்ந்த ஒரு கமிஷன் ஏற்பட வேணுமென்று நான் பிரரேபணை செய்கின்றேன் "என்று பேசினர்.

***

ராவ்பகதூர் மிஸ்டர் G. சீனிவாசராவ் அடியிற்கண்ட திர்மானத்தைப் பிரரேபணை செய்தனர்.

" இந்தக் கூட்டம் கூட்டுப்பான்மை முயற்சியில் கவர்ன்மெண்டார் அனுதாபம் காட்டி வருவதற்காக வந்தன மளிக்கின்றது. சங்கங்கள் வரவர ரிஜிஸ்டர் செய்யப்பட்டுவருவது குறைந்துக்கொண்டு வருவதைப்பற்றியும் ஜில்லாக்களில் இம்முயற்சி தாமதமாக விருத்தி செய்யப்பட்டு வருவதையும் குறித்து விசனிக்கின்றது. இன்ஸ்பெக்டர் சிப்பந்திகளை பலப்படுத்தியும் சங்கங்கள் தீவரமாய் ரிஜிஸ்டர் செய்யப்படுவதற்கு தக்க ஏற்பாடுகள் செய்தும் இன்னும் பலவிதமான ஐக்கிய பான்மையை ஆதரித்தும் இம்முயற்சியை துரிதமாக கவர்ன்மெண்டார் விருத்திசெய்துகொண்டு போகவேண்டுமென்று இக்கான்பரன்ஸ் கேட்டுக்கொள்ளுகின்றது."

இந்தப் பிரரேபணையைச் செய்யும்போது இந்த சங்கங்கள் விருத்தியாய் வருவது அபாயத்திற்கு வித்து என்று சில விடங்களில் எண்ணப்பட்டு வருகிறதென்றும் ஐக்கிய நாணய சங்கவிருத்தியைக் குறித்துஒரு ஐ. சி. எஸ். (சிவிலியன் கலெக்ட்டர் அல்லது ஜட்ஜ்) உடன் தாம் பேசிக்கொண்டிருந்த தாகவும் தேசத்தில் அமரிக்கைபரவிவரும் காலத்தில் இச்சங்கங்கள் தேசத்திற்கு பெரிய நன்மைகளைச் செய்யுமென்றுபதில்சொன்னர் என்றும் தேசத்தில் திருப்தி பரவிவரும் பரியந்தம் அமரிக்கை கெட்டுப்போக மாட்டாதென்று அவருக்குத் தாம் சொன்னதாயும் சொன்னர். ஜனங்களும் கவர்ன்மெண்டாரும் இம்முயற்சியைப் பலப்படுத்தி இதன் நன்மைகளை நாடெங்கும் பரவும்படி செய்யவேண்டும். ஏன் யெனில் கூட்டுப்பான்மை முயற்சியைப்போல தேசத்திற்கு நன்மைசெய்யக்கூடிய ஏற்பாடு வேறே யாதொன்று மில்லை.

***

மிஸ்டர் K. T. பார்த்தசாரதி அய்யங்கார் இப்போதிருக்கும் ரிஜிஸ்டிரார்களுடைய பார்வையில் இச்சங்கங்கள் தீவிரமாய் விருத்தியாகி வருகின்றன வென்றும்சொல்லி பிரரேபணையை அங்கீகரித்துப் பேசினர். தஞ்சாவூர் மிஸ்டர் T. R. சீனிவாச அய்யங்கார் இத்தீர்மானத்தை ஆதரித்தபோது அடியிற் கண்டபடி பேசினர் :—கடந்த 10-வருஷகாலமாக சென்னை ராஜதானியில் ஐக்கிய நாணய சங்கங்கள்

நடைபெற்று வருகின்றன வென்றும், கடந்த ஜூன்மீ வரையில் 972 சங்கங்கள் ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன வென்றும், இந்த சங்கங்கள் சுமார் 3-வாயிரஜனங்களுக்குப் பிரயோஜனப்பட்டு வருகின்றன வென்றும் இச்சங்கங்களால் உண்டாகும் நன்மையை தாம் எடுத்துச்சொல்ல அவகாசமில்லாம லிருந்தபோதிலும் அவைகள் பெரும்பாலும் எல்லோருக்கும் தெறிந்தவைகளே ஒழிய மற்றபடிவேறில்லை என்றும்சொன்ஞர். ஐக்கிய நாணயசங்கங்கள் நம்முடைய மாகாண ஜில்லாக்களில் இன்னும் சரிவர பரவவில்லை என்றும் செங்கற்பட்டு, அநந்தப்பூர், சேலம் முதலிய ஜில்லாக்களில் இச்சங்கங்கள் 100-க்கு மேற்பட்டிருக்கின்றன வென்றும், சில ஜில்லாக்களில் மிகவும் சொற்பமாக விருக்கின்றனவென்றும், கிராமங்களில் கடன்படும் ஜனங்களுடைய உபத்திரவங்களை சரியானபடி நீக்க வேண்டுமானல் இம்மாதிரி எவ்வளவோ சங்கங்கள் ஸ்தாபிக்கப்படவேண்டும். இதுவரையில் வருடம் ஒன்றுக்குச் சராசரி 90-சங்கங்கள் விகிதம் ரிஜிஸ்டர் செய்யப்பட்டு வந்திருக்கிறது. இனியும் இதே அளவு அதிகரித்து வரும்பக்ஷத்தில் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு சங்கம் ஏற்பட பல வருஷங்களாகும் என்றும் சொன்ஞர். அக்கிராசனதிபதி அவர்களின் உபன்னியாசத்தில் நம்முடைய மாகாணத்தில் பெந்தகத்தின்பேரிலோ அல்லது வெண்ணலையாகவோ கடன் வாங்குகிறவர்களுடைய எண்ணிக்கையையும் கடன்வாங்கப்படும் தொகையையும் கடன் படுகிறவர்களுடைய ஸ்திதியும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. கடன்பட்டவர்கள் தங்களுடைய கடன் உபாதையை நாளடவில் விலக்கிக்கொள்ள வேண்டுமென்பதில் தடையில்லை யாயினும், அனியாயவட்டிவாங்கி அவர்களுடைய சொத்தையே கட்டிக்கொள்ளும் பேராசைக்காரர்களிடம் கடன் வாங்கும்படி விடக்கூடாது. கடன்வாங்க விரும்புகிறவர்கள் ஐக்கிய நாணயசங்கங்கள் மூலமாகவே கடன்வாங்க வேண்டும். அப்படிவாங்கினல் வட்டி சொற்பமாக விருப்பதுமன்றி சிறுகச் சிறுகவும் முதலைச் செலுத்திவிடலாம். அந்த நன்மையை ஜனங்கள் உணர்ந்துகொண்டிருக்கிருர்கள் என்பதில் ஐயமில்லை. ரிஜிஸ்டர் செய்யப்படுவதற்கு ரிஜிஸ்டிராரிடமும், இன்னும் சில உத்தியோகஸ்தர்களிடமும் வந்திருக்கும். 100-க் கணக்கான விண்ணப்பங்களே அத்தாக்ஷியாக விருக்கும். இச்சங்கங்கள் விரைவாக விர்த்திபடுத்தக்கூடாதென்றும் அப்படி விருத்திபடுத்தினல் ஒழுங்காய் நடைபெறமாட்டாதென்றும் சிலர் அபிப்பிராயப்படுகிருர்கள். அப்படி நினைப்பதினல் சும்மாவிருப்பதாவது அல்லது மெதுவாய் விருத்தி படுத்துவதாவது நியாயமாக மாட்டாது. சங்கங்களுக்கு யாதொரு செலவுமின்றி கவர்ன்மெண்டாரே மேல்பார்வை பார்த்துவருவது ராஜ்ஜிய தருமம். அது விஷயத்தில் அவர்கள் செலவிடும் பணம் சரியானபடி விநியோகப் படுத்தப்பட்டு வருகின்றது. ஆகையால் இது வரையில் சங்கங்களை விரைவில் விருத்திபடுத்தி வந்ததுபோலவே இனியும் கவர்ன்மெண்டார் விருத்திபடுத்தி வரவேண்டும். ஐக்கிய நாணய சங்கங்களால் உண்டாகும் நன்மையை உத்தேசித்துப் பார்க்குமளவில் கவர்ன்மெண்டார் இது விஷயத்தில் செலவிடும் தொகை ஒரு பெரிதாக மாட்டாது. ரிஜிஸ்டரார், இன்ஸ்பெக்டர் முதலிய சிப்பந்திகளை இன்னும் விசேஷப்படுத்தி விசேஷ சங்கங்கள் ரிஜிஸ்டர் செய்யப்பட வேண்டுமென்றும் சொன்ஞர்.

ஐக்கிய நாணய சங்கங்கள் விஷயமாக இவ்வளவு தூரம் பேசினபின்பு வேறுவிதமான ஐக்கிய சங்கங்களைப்பற்றியும் அடியிற்கண்டபடி பேசினர்:—வேறுவித ஐக்கிய சங்கங்களை உண்டாக்கி கடனளிகளுக்கு மனத்தேற்சி யுண்டு பண்ணுவதுடன் அவர்கள் செல்வத்தை அதிகரித்துக்கொள்ளும் வழிகளை அவர்களுக்கு எளிதில் காட்டி அவர்களுடைய பிரயாசை கைகூடுமாறு விவசாய சாஸ்திர ஞானத்தைப் பரவச்

செய்து, நல்ல விதை, சரியான எரு, சுலபமாய் அதிகபலனை உண்டுபண்ணுங் கருவிகள் முதலியவற்றை அவர்கள் அடையும்படி விவசாய ஐக்கிய சங்கங்களையும், நல்ல பால், தயிர், வெண்ணெய் கிட்டும்படி செய்யும்படி ஐக்கிய பால் சாலைகளையும், கால் நடைகள் கசப்பு முதலிய வியாதியால் மாண்டுபோகாமல் விருத்தியாக ஐக்கிய கால்நடை இன்ஷியூரன்ஸ் சங்கங்களையும், ஐக்கிய அரிசியந்திரங்கள், பஞ்சாலைகள், கரும்பாலைகள், எண்ணெய்ச் செக்குகள் போன்ற தொழிற்சாலைகளை ஐக்கியசங்க முறைமையால் ஏற்படுத்தியும் கொஞ்சச்செலவில் நல்ல சுகாதார வழியை அனுசரித்து வீடுகளைக்கட்டிக்கொள்ள, வீடுகட்டும் ஐக்கிய சங்கங்களை உண்டாக்கியும், நல்ல பண்டங்கள் கொள்ளவும், விளையும் பண்டங்களை எளிதில் மாற்றிக் கொள்ளவும் சாதாரணமாயுள்ள ஐக்கிய பண்டகசாலை சங்கங்களையும் ஏற்படுத்த நாம் எல்லோரும் முயலவேண்டும். இப்படிச்செய்தால் தேசத்தின் க்ஷாமம் குறைந்து க்ஷேமம் மேன்மேலும் விளையு மென்பதில் சந்தேகமில்லை. இப்படிச்செய்ய நம் தேசாபிமானிகள் அனேகர் முன்வரவும்வேண்டும் என்பது நமது பிரார்த்தனை! என்று பேசி முடித்தனர்.

Joint Stock Companies.
ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனிகள்.

:(o):

கடந்த மார்ச்சுமாதத்தில் இந்தியாவில் இன்னும் 20 ஜாயின்ட் ஸ்டாக் கம்பெனிகள் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கின்றன. இவைகளில் 9, வர்த்தக கம்பெனிகள், 3-லாவாதேவிசெய்கிற பாங்கிகள், இரண்டு இன்சூரன்ஸ் கம்பெனிகள், ஒன்று பஞ்சு ஆலை, ஒரு டிராம்வண்டிகம்பெனி, ஒரு கூட்டுமுறைசங்கம், ஒரு பயிர்தொழில் கம்பெனி, ஒரு சுரங்கக்கம்பெனி, ஒரு அச்சு யந்திரசாலை. மேலே சொல்லப்பட்ட கூட்டு முறை சங்கமென்பது ஐக்கிய நாணயசங்கம். ரூபா 50-ஆயிரம் முதலுடன் தூத்துக்குடியில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

AGRICULTURE.
விவசாயம்.
The Bristol Agricultural Show.
பிரஸ்டல் விவசாயக் காக்ஷி.

நிகழும் ஜூலைமாதத்தில் பிரிஸ்டல் நகரில் விவசாய காக்ஷி ஒன்று காண்பிக்கப் படப்போகிறது. ராயல் அகிரிகல்சரல் சங்கத்தின் ஆதாரணையின் பேரில் நடக்கப் போகின்றது. இக்காக்ஷி வருஷாவாரி காண்பிக்கப் படும் காக்ஷி; விவசாய யந்திரங்கள், குதிரைகள், கால் நடைகள், ஆடு, பன்றி, கோழி வெண்ணை நெய் முதலியவைகள் காண்பிக்கப்படும். காட்டுப் பொருள்களும், தோட்டப் பொருள்களும் காண்பிக்கப்படும். மாக்ஷிமை தங்கிய மகா ராஜாவே ஷை சங்கத்திற்கு பிரசிடெண்டாக விருக்கும்படியான பாக்யத்தைப் பெற்றிருக்கிறது. அவர்களும் காக்ஷியின் நான்காம் நாள் விஜயம் செய்வதாய் சம்மதத்தை அறிவித்திருக்கிறார்கள்.

:*:

Bengal Rice.
பங்காள அரிசி.

முந்திய வருஷத்தைவிட பிரஸ்தாப வருஷத்தில் நெல்மாசூல் 100-க்கு 15 மேனிக்கி குறைந்து போகுமென்று எதிர்பார்க்கப் பட்டது போல சர்க்காரும் அதே மாதிரியாக ரிப்போர்ட் பயிரங்கப்படுத்தி யிருக்கிறார்கள். நெல் மாசூல் கம்மி என்றால் அரிசியின் விலை ஏற்றம் என்றும் பர்மாவிலிருந்தும் விசேஷமான இறக்குமதி என்றும் தாற்பரியம்.

சென்ற வருடம் சீனா ஜப்பான், ஜாவா முதலிய விடங்களிலிருந்து அரிசிக்கு விசேஷ கிராக்கி யிருந்தது. பர்மா வேண்டியவரையில் உயர்ந்த விலைக்கு சப்ளைசெய்து பயன் அடைந்தது. அதேமாதிரியான அதிர்ஷ்டம் இந்த வருஷமும் உண்டாகுமென்று எண்ணிக்

கொண்டு பஞ்சவில்லையை எதிர்பார்த்து மூட்டைகளை கட்டிப்போட்டு வைத்திருக்கின்றார்கள். பர்மாவின் நோக்கத்தை அறிந்து வங்காள வர்த்தகர்கள் அரிசிக்கு வங்காளத்தில் கிராக்கியாயிருந்தும் பர்மாவிலிருந்து இறக்குமதி செய்யவில்லை. நிற்க, பர்மாவிலும் இந்தியாவிலும் பிரஸ்தாப வருடத்தில் 5,200 லக்ஷம் அந்தர் தயார் செய்யப்பட்டிருக்கிறது. சீனா அரிசி உற்பத்தி இவ்வளவு சிலாக்கியமென்று சொல்ல முடியாமற் போனபோதிலும் முந்திய வருஷத்தைவிட விருத்தி யென்றே சொல்லவேண்டும். ஏன் என்றால் "யாங்ட்சி" நதியோரத்தில் வெள்ளப் பிரவாகம் உண்டாகிபயிர் சேதப்பட்டுப் போய்விட்டது. ஜப்பானிலும் பார்மோசாவிலும் புயல் காற்று அடித்து மாசூல் இவ்வருடம் 100-க்கு 10 கம்மியாய் கிடைக்குமென்று எதிர்பார்க்கப் படுகின்றது. கொரியாவிலும் வழக்கம்போல போதுமான மாசூல் கிடைக்க மாட்டாது. யுனைட்டெட் ஸ்டேட்டிலும் இட்டாலியிலேயும் பயிர் செழிப்பா யிருக்கிறதென்று ரிப்போர்ட் செய்யப்பட்ட போதிலும் முந்திய வருடத்தை விட குறைந்த மாசூல் தான் கிடைக்கும். பிலிப்பயன் தீவில் விசேஷமான நல்ல மாசூல் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. சியாமும், இந்து சைனாவும், உலகத்திற்கு அரிசி சப்ளை செய்யும் தேசங்களுக்குள் முதன்மையாய் நிற்கின்றன; சாதாரண காலங்களில் இந்தியாவில் விளையும் நெல் அனேகமாக இந்தியாவிலேயே செலவாய் விடுகின்றது.

--:(*):--

Cattle Insurance Societies.

கால்நடை இன்சூரன்ஸ் சங்கங்கள்.

லைப் இன்சூரன்ஸ் கம்பெனிகள் வெகுகாலமாக ஊர்ச்சிதத்திலிருந்து வருகின்றன. அநேகர் தங்களுடைய ஆயுளை ரிஜிஸ்டர்செய்து வைக்கிறார்கள். அப்படி ரிஜிஸ்டர் செய்துவைத்து மாதா மாதம் கம்பெனியார் குறிப்பிடும் தொகையைச் செலுத்திக்கொண்டு வந்தால், ஷை ரிஜிஸ்டர் செய்துவைத்த மனிதனுக்கு மரணம் நேரிட்டால், கம்பெனியார் அவன் எவ்வளவு தொகைக்கு ரிஜிஸ்டர் செய்துவைத்தானோ அந்தத்தொகையை அவனுடைய மனைவிக்கோ அல்லது புத்திரனுக்கோ அல்லது அவனால் குறிப்பிடப்பட்டவார்சுகளுக்கோ கொடுத்து வருகிறார்கள். 'இன்றைக் கிருப்பாரை நாளைக்கிருப்பரென்று எண்ணவோ திடமில்லை' என்று தாயுமானவர் சொன்னதுபோல மனிதனுக்கு மரணம் இன்னசமயம் வருமென்று நிச்சயமாய்ச் சொல்லுவதற்கில்லை, ஆகார சாமான்கள் ஏறி நிற்கும் இக்காலத்திலும் நாகரீகமேன்பட்டால் மனிதன் தன்னுடைய அந்தஸ்தை நிர்வகித்துக்கொள்ள அதிகப்படியான செலவுகளைச்செய்ய கடமைப்பட்டிருக்கிறான். ஆதலால் இக்காலத்தில் மனிதர்கள் வருமானத்திலிருந்து பெண்டு பிள்ளைகளை உத்தேசித்து மீத்துவைப்பதற்கிடமில்லாமலிருக்கிறது. இந்த நிலைமையிலிருக்கும் மனிதன் இறந்துபோனால் அவனுடைய சம்பாதனையை நம்பிக்கொண்டிருக்கும் அவனுடைய குடும்பத்தார்கள் கனத்த கஷ்டமடைகிறார்கள். இன்சூரன்ஸ் கம்பெனிகளில் ஆயுளை ரிஜிஸ்டர்செய்துவைத்தால் மரணம் எதிர்பார்க்காத காலத்தில் நேரிட்டால் கம்பெனிக்காரர்கள் மரணம் நேரிட்டபின்பு கொடுக்கும் தொகையைக்கொண்டு காலக்ஷேபம் நடத்திவரலாம். இந்த நன்மைக்காக மனிதர்கள் தங்களுடைய ஆயுளை லைப் இன்சூரன்ஸ் கம்பெனிகளில் ரிஜிஸ்டர் செய்து வைக்கிறார்கள்.

இதுபோலவே கால் நடைகளுக்கும் இன்சூரன்ஸ் கம்பெனிகள் ஏற்படவேண்டுமென்று கடந்த மாதத்திய விவசாய ஜர்னலில் மிஸ்டர் A. W. பிரீமான்டில் என்பவர் யோஜனைசொல்லுகிறார். இங்கிலாண்டு, வேல்ஸ் முதலிய தேசங்களில் கடந்த 100-வருடங்களாக இம்மாதிரியான இன்சூரன்ஸ் கம்பெனிகள் ஏற்பட்டு நடந்து வருகின்றன. பர்மாவில்கூட 23-கம்பெனிகளிருக்கின்றன. இக்கம்பெனிகளில் ஒரு கம்பெனியார் சென்னையில் ஒரு கிளை ஸ்தாபித்திருக்கிறார்கள். வேலை ஆரம்பித்து நடந்துவரும்போது ஷை கம்பெனியின் டைரக்டரில் ஒருவர் இறந்துபோய் விட்டார். அதனால் தற்காலம் வேலை நிருத்தப்பட்டிருக்கிறது. சென்னை ராஜதானியின் சிற்சில பாகங்களில் கால்நடை

ஆகார சாமான்களின் பஞ்சமும் கால் நடை நோயும் பரவிவருகின்றன. இந்த இரண்டு சந்தர்ப்பங்களும் இக்கம்பெனியின் நோக்கத்திற்கு விரோதமான காரியங்கள். கால்நடை ஆகார சாமான் பஞ்சமும், கால்நடை நோயும் எந்தெந்தவிடங்களில் உளவோ அவ்விடங்களில் இந்த இன்சூரன்ஸ் கம்பெனிகள் ஏற்பட்டால் மிகுந்த லாபகரமான வேலை நடக்குமென்பது அனுபோகஸ்தர்களுடைய அபிப்பிராயம்.

Labour and Emigration.

கூலிவேலைக்காரர்கள் தீபாந்திரம் செல்லுதல்.

—(:-:)—

சென்ற ஏப்ரல்மீ 24உ சென்னையில் கூடிய சென்னை மாகாணச் சட்டசபையில் ஆனரபில் மிஸ்டர் பார்பர் கூலிக்காரர்கள் தீபாந்திரம் செல்லும்படி விடுவதால் விவசாயத்தொழிலுக்கு ஊனம் நேரிடுகிறதென்றும் கூலிக்காரர்கள் தீபாந்திரம்செல்லுவதைத் தடைபடுத்த கவர்ன்மெண்டார் ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் வேண்டிக்கொண்டார்.

இவர் பேசினது சென்னைப் பத்திரிகைகளில் பிரசுரமாக அதைப்பார்த்த 'சிலோன் டயம்ஸ்' என்கிற பத்திரிகை ஆனரபில் மிஸ்டர் பார்பர் யோஜனையைக்கேட்டு சென்னை கவர்ன்மெண்டார் கூலிகள் சிலோனுக்கு வருவதைத் தடுக்க ஏற்பாடு செய்தபோதிலும் இந்தியா கவர்ன்மெண்டாரும் இந்தியா மந்திரியும் அந்த ஏற்பாட்டிற்கு உடன்தையாகவிருக்கமாட்டார்கள் என்றும் கூறுகிறது. மேலும் சென்னை கவர்ன்மெண்டாரே அப்படி ஒரு ஏற்பாட்டையும் செய்ய உடன் படமாட்டார்கள் என்றும் இந்தியாவில் பஞ்சம் வியாபித்திருக்கும் காலத்தில் அனேக ஜனங்கள் சிலோனுக்குவந்து பிழைப்பதுமன்றி தென்னிந்தியாவிலிருக்கும் தங்களுடைய பந்துக்களுக்கும் மணியார்டர்செய்து அனுப்புகிறார்கள் என்றும் கங்காணிகள் மூலியமாகத் தோட்டங்களில் வேலைசெய்யும் கூலிக்காரர்களைத் தவிர ஆயிரக்கணக்கான ஆண் பெண்கள் கொளும்பு முதலிய விடங்களுக்குவந்து ரிக்ஷாவண்டிகள் இழுத்தும் புல் வெட்டியும் ரோடுகளிலும் ரெயில்வேயிலும் வேலைசெய்தும் வயிர் பிழைக்கிறார்கள் என்றும் இவர்கள் எல்லோரும் வருவதைத்தடுக்கும் ஒரு ஏற்பாட்டிற்கு கவர்ன்மெண்டார் உடன்படமாட்டார்கள் என்றும் ஷை பத்திரிகை கூறுகின்றது.

ஆனரபில் மிஸ்டர் பார்பர் யோஜனைக்கும் எண்ணத்திற்கும் விரோதமாக நிகழ் வருடத்தில் கூலிகள் முந்திய வருடத்தைவிட ஏதேஷ்டமாக வந்து கொண்டிருப்பதுமன்றி எப்போதும் வரும் காலத்திற்கு முந்தியே வந்துவிட்டார்களென்று ஒரு தோட்ட சூப்ரண்டு சிலோன் பத்ரிகையின் பிரதிநிதியிடம் சொல்லிக் கொண்டிருந்தாராம்.

இந்த சந்தர்ப்பத்தில் ஸ்ரேயிட் செட்டில் மெண்டுகளுக்கும் பிடரேடெட் மலே ஸ்டேட்டுகளும் எவ்வளவு கூலிக்காரர்கள் வந்திருக்கிறார்களென்று அறிந்துகொள்ளுவது தகுதியுடையது. மேலே சொல்லப்பட்ட இரண்டு தீபாந்திரங்களும் பிரிடிஷ் இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியாருக்கு ஏதேஷ்டமான பணம் செலுத்தி வருகிறார்கள். இதற்குப்பதிலாக அக்கம்பெனியார் வாரம் ஒருமுறை ஸ்டீமர் சென்னைக்கு அனுப்புகிறார்கள். இந்த ஸ்டீமர் சென்னையிலிருந்து புறப்பட்டு நாகப்பட்டணம் வழியாக பினங் போர்ட் சுல்டான்ஹாம், சிங்கப்பூர் முதலிய விடங்களுக்குச் செல்லுகிறது. வாரம் ஒருமுறை ஒரு ஸ்டீமர் ஸ்டிரேயிட் செட்டில் மெண்டை விட்டுப் புறப்பட்டு நாகப்பட்டணத்தைப் பிடித்து சென்னைக்கு வந்துசேருகிறது. தென்னிந்தியாவிலிருந்து பினங்கிற்கு 1911-ல் போன கூலிகள் மொத்தம் 108,471. 1910-ல் 83723 பேர்கள் போயிருக்கிறார்கள். ஆகையால் 1911ல் 24 ஆயிரம் கூலிகள் அதிகமாய்ப் போயிருக்கிறார்கள், இவ்வளவு அதிகப்படியான கூலிக்காரர்கள் போனது அந்த வருஷம் தான். 1912ல் கணக்குஇன்னும்நமக்குக் கிடைக்கவில்லை.

பிடரேட்டட் மாலெஸ்டேட்டுகளில் 1911 மார்ச்சு மீ 11உயில் 156,730 தமிழ் ஜனங்களிருந்ததாக ஜனகணித ரிப்போர்ட்டால் நாம் அறிகின்றோம். அதே வருஷக் கடைசியில்

190,000 தமிழ் ஜனங்களிருந்தாகவும் அறிகி றோம்.

பி. ஐ. எஸ் என். கம்பெனியார் அனுப்பும் வாராந்திர ஸ்டீமர்கள் இந்தக் கூலிக்காரர்களை ஏற்றிக்கொண்டுபோகிறது போதாமல் இன்னும் அனேக ஸ்டீமர்களும் அமர்த்தப்பட்டு கொண்டு போகின்றன.

சென்னை ராஜதானியின் வட பாகங்களி லிருந்தும் அதாவது தெலுங்கு தேசங்களி லிருந்தும் கூலிக்காரர்களைக் கொண்டு வரும் படியாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மாலேயாவிலிருக்கும் பயிர்ச் சங்கத்தார்கள் தீர் மானித்திருக்கிறார்கள். சுமார் வருஷா வரு ஷம் பதினாயிரம் கூலிகள் தெலுங்கு ஜில்லாக் களிலிருந்து போகிறார்கள் என்பதில் தடை யில்லை. ஆயினும் இன்னும் விசேஷமான கூலி கள் வர வேண்டுமென்று பிரயத்தனம் செய்யப் பட்டு வருகின்றது. பெஜவாடாவிலும் காக்கி நாடாவிலும் இரண்டொரு டெப்போக்கள் ஸ்தா பிக்க வேண்டுமென்று மாலேயா பயிர் சங்கத் தார்கள் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார் கள். இதற்காக மானேஜர்களும் அசிஸ்டண்ட் மானேஜர்களும், கண்டக்டர்களும் தயார் செய்யப்பட்டு வருகின்றார்கள். ஆகையால் தெ லுங்கு ஜில்லாக்களிலிருந்தும் இனி விசேஷ கூலிக்காரர்கள் பிரயாணமாவார்கள் என்று எண்ணப்படுகிறது.

சிங்கப்பூர் டைம்ஸ், சிலோன் டைய்ஸ் முத லிய பத்திரிகைகளும் மலேயா பயிர் சங்கத் தார்களும் தங்கள் தங்கள் நன்மையை உத்தே சித்து தென்னிந்தியாவிலிருந்து கூலிக்காரர் களை தருவிப்பது நலம் என்று உத்தேசித்து ஏற்பாடு செய்கிறார்களே ஒழிய தென்னிந்தியா விலிருக்கும் கூலிக்காரர்கள் எல்லாம் அவ்விடம் சிலோன் பயிர்த் தோட்டத்திற்கு வந்து விட் டால்தென்னிந்தியா பெரும்கஷ்டமடைந்து வரு வதைக் கவனிக்கிறார்களில்லை. கூலிக்காரர்கள் தீபாந்திரத்திற்குச் சென்று விடுவதால் ஜமீன் தார்களும், மிராசுதார்களும் சாகுபடி செய்ய ஆட்கள் அகப்படாமல் கஷ்டப்படுகிறார்கள். பாரி வர்த்தக முயற்சிகளும் அனேக ஆலைகளும் கூலிக்காரன்அகப்படாமல் வருந்துகின்றன? பஞ் ச காலத்தில் அரிசியை அன்னிய தேசங்களுக்கு ஏற்றுமதி செய்ய விடுவது நியாயமோ? நதி களில் பிரவாகம் உண்டாகி உடைப்புகள் நேரிடும்போது, அவ்வுடைப்புகளை அடைக்க வேலை செய்யும்படி சட்ட மூலியமாக கட்டா யப்படுத்த வில்லையோ? அதுபோல ஜமீன்தார் களும், மிராசுதார்களும் ஆலைகளும் கூலிக் காரர்களில்லாமல் கஷ்டப்பட்டு வரும்போது அவர்கள் அன்னிய தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட விடுவது நியாயமாகுமோ?

Indentured Labour System Inquiry.

தீபாந்திர கூலிகளைப்பற்றிய விசாரணை.

பம்பாய் சிவில் செர்விசைச் சேர்ந்த மிஸ்டர் ஜேம்ஸ் E. நீபாரும் மத்தியமாகாணத்தில் கௌரவ மாஜிஸ்டிரேட்டாகவிருக்கும் மிஸ்டர் சிம்மன்லாலாவும் தீபாந்திரங்களில் இந்தியக் கூலிக்காரர்களுடைய நிலைமை எப்படியிருக் கிறதென்பதைப்பற்றி விசாரணை செய்யப் புற ப்பட்டிருக்கிறார்கள். பிரிடிஷ் கயனா, டிரினி டாட், ஜமேய்க்கா, பிஜி, சூர்மான் என்கிற டச்சு குடியேற்றநாடு ஆகிய இந்த நாடுகளைப் போய் பார்வையிடுவார்கள். கூலிக்காரர்களு டைய நிலைமை எப்படியிருக்கிறதென்று நே ரில் அறிந்து அவர்களுடைய நிலைமையை உயர் த்த யோஜனைகள் சொல்ல வேண்டு மென்பது கவர்ன்மெண்டாருடைய உத்திரவு. இவர்கள் சாக்ஷி விசாரணை செய்ய வேண்டிய அவசியமெ ன்று அபிப்பிராயப்பட்டால் குடியேற்ற நாட் டின் கவர்ன்மெண்டார் அதற்கு வேண்டிய ஏற் பாடுகளைச் செய்து கொடுப்பார்களாம்.